# செயல்நிறைவேற்று அறிக்கையும்

# வருடாந்த கணக்குகளும்

**2018 ஆம் ஆண்டுக்கானது**

## வர்த்தக திணைக்களம்

## தலைப்பு 295


4 ஆவது மாடி, “ரக்ஷன மந்திரய”
இல.21, வொக்ஸோல் வீதி,
கொழும்பு 02.

தொலை : 011-2329733 / 2436114

தொலைநகல் : 011 - 2430233

மின்னஞ்சல் : fortrade@doc.gov.lk

இணையம் : www.doc.gov.lk

**பொருளடக்கம்**


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 1 |
| 2 | இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு - 2018 | 5 |
| 3 | பல்தரப்பு வர்த்தக உறவுகள் | 11 |
| 4 | இருதரப்பு வர்த்தகமும் பொருளாதார ஒத்துழைப்பும் | 20 |
| 5 | பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு | 23 |
| 6 | வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு | 29 |
| 7 | உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் (COOs) வழங்குகை | 44 |
| 8 | வருடாந்த கணக்குகள் 2018 | 46 |

## அட்டவணைகள்



| | பக்கம் |
|---|---|
| இலங்கையின் மொத்த இறக்குமதிகள், மொத்த ஏற்றுமதிகள், மொத்த வர்த்தகம் மற்றும் வர்த்தக மீதி (2010 – 2018) | 08 |
| வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு - 2018 | 31 |
| வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை - 2012-2018 | 45 |
| வருடாந்த கணக்குகள் - 2018 | 46-47 |



## வரைபடங்கள்



| | பக்கம் |
|---|---|
| *வர்த்தக திணைக்களத்தின் நிருவாக கட்டமைப்பு* | 03 |
| *வர்த்தக திணைக்கள உறவுகள்* | 04 |
| *இலங்கையின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தக தொகுப்பு* | 08-09 |
| *வெளிநாட்டு வர்த்தகபோக்கு - (2016-2018)* | 10 |

## 1. அறிமுகம்

**<u>திணைக்களத்தின் நோக்கு</u>**

***"சர்வதேச வர்த்தக உறவுகளினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்"***

**<u>திணைக்களத்தின் செயற்பணி</u>**

***"இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பயன் மிக்கதான சேவையினை வழங்குவதன் மூலம் மொத்த உற்பத்தி ,வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதனூடாக வாழ்க்கைத் தரங்களை உயர்த்தி வாழ்வின் அதி உன்னத இடத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தின் வர்த்தக கொள்கையினை வினைத்திறனுடன் அமுலாக்குவதன் ஊடாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை இருதரப்பு ,பிராந்திய மற்றும் பல தரப்பு மட்டங்களில் ஊக்குவித்து விருத்தி செய்தலாகும்."***

வர்த்தக திணைக்களமானது, கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் சர்வதேச வர்த்தக கொள்கை விடயங்களிலும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளினை இருதரப்பு ,பிராந்திய மற்றும் பல்தரப்பு மட்டங்களில் பேணிக்கொள்வதிலும் மதியுரை வழங்கும் முகவராண்மையென்ற முக்கியமான பாத்திரத்தினை வகித்து வருகின்றது .வர்த்தக கொள்கை மற்றும் ஊக்குவிப்புக்களுடன் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக வர்த்தக திணைக்களத்தினால் பல்வேறு தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன .


வர்த்தக திணைக்களத்தினால் இது தொடர்பில் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய பணிகள் பற்றி சுருக்கமாக கீழே தரப்படுகின்றது.

- உரிய வரிசை அமைச்சுக்கள் / அதிகாரசபைகள் மற்றும் தனியார் துறை அக்கறைதாரர்களுடன் ஒருங்கிணைந்து இலங்கையின் சர்வதேச வர்த்தக கொள்கையினை வகுத்தலும் அமுல்படுத்துதலும்.
- நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியினை விருத்தி செய்யும் வகையில் வெளிநாட்டு வர்த்தக கொள்கை தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல்.
- வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தக பிரதிநிதிகளினூடாக வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளிலிலுள்ள இலங்கையின் வர்த்தக நலன்களை ஊக்குவித்தல்.

மீளாய்வு காலப்பகுதியில் ,வர்த்தக திணைக்களமானது வெளிநாட்டு வர்த்தக துறை தொடர்பான அரசாங்கத்தின் நோக்கு மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி நோக்கில் மேற்கொள்ளக்கூடிய முக்கியமான பங்களிப்புக்களின் அடிப்படையில் அதன் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளது .அந்தவகையில்201 ,8 ஆம்

ஆண்டுக்கான வேலைத்திட்டம் ,தற்போதிருக்கும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துதல் , புதிய சந்தைகளையும் உற்பத்திப் பொருட்களையும் ஊக்குவித்தல் ,சர்வதேச வர்த்தக முறைமையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை ஊக்குவித்தல் மற்றும் தென்னாசிய பிராந்தியத்தில் வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் நாடாக இலங்கையை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது .வர்த்தக திணைக்களம் ,அதன் வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவத்தினூடாக நேரடி வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அவ்வாறே இலங்கை சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பதற்குத் தேவையான உதவிகளையும் அவசியமான வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது.

# வர்த்தக திணைக்களத்தின் நிருவாக கட்டமைப்பு





Abbreviation

| | |
|---|---|
| D | Director |
| DD | Deputy Director |
| AD | Asst. Director |
| CRO | Commercial Research Officer. |
| Mgt. Asst. | Management Asst. |
| OES | Office Aid |

*Most senior (Director Level) officers are required to be posted as Ambassador/ PR to WTO, Washington. London, Brussels, UAE & Karachi.

** Currently these divisions are headed by the Deputy Directors

# எமது உறவுகள்


வரிசை அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள்
உவநி மற்றும் ஏனைய வர்த்தகம் தொடர்பான நிறுவனங்கள்
வர்த்தக மன்றங்கள்
பிராந்திய மற்றும் இருதரப்பு உடன்படிக்கைகள்
ஒத்தியல் உடன் செயலாற்றுதல்
கேந்திர மையமாக
வர்த்தக ஊக்குவிப்பு நிறுவனங்கள்
முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள்
தனியார் துறை
வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மீதான கூட்டு ஆணைக் குழுக்கள்

## 2. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு – 2018

2018 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு வர்த்தகப் போக்கானது சந்தை அணுகுமுறையிலான வாய்ப்புக்களையும் குறித்த ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட உள்ளக மற்றும் வெளிநாட்டு வர்த்தக சவால்களின் விளைவுகளினையும் தனதாக்கிக் கொண்டுள்ளது. வெளியக முன்னணி சம்பாத்தியங்கள் தொடர்பிலும் அவதானங்கள் செலுத்தப்பட்டது. உலகளாவிய பொருளாதார நெருக்கடி தொடர்பில் முதன் முறையாக முகங் கொடுக்க வேண்டிய நிலை5 ஏற்பட்டமையினால், முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் ஒருமித்த பொருளாதார வளர்ச்சி குறித்தும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய விடயங்களில் இலங்கையின் பிரதான வர்த்தக பங்காளி நாடுகளான ஐக்கிய அமெரிகா, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜப்பான் பொன்ற நாடுகளும் உள்ளடங்குகின்றன. எவ்வாறாயினும், உலகளாவிய வர்த்தக வளர்ச்சியானது 2018 இல் 4.4% ஆக இருந்துள்ளது. பிராந்திய பொருளாதார ஸ்திரமற்ற நிலை தொடர்பில் பங்களிப்பினை வழங்கிய ஐக்கிய அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளினால் விதிக்கப்பட்ட வர்த்தக ரீதியான கட்டுப்பாடுகள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன. அத்துடன், மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை, ஏனைய வர்த்தக பங்காளி நாடுகளின் வர்த்தக பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பன குறித்த ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் வர்த்தகத்தில் பாதகமான விளைவினைத் தோற்றுவித்துள்ளன.

2017 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் அறிக்கையின்படி, பாதகமான காலநிலை மற்றும் சர்வதேச வர்த்தகப் பொருட்களின் விலையினை நிலையாகப் பேண முடியாமை போன்ற காரணங்களினால் இறக்குமதிச் செலவுகள் எதிர்பார்க்காத வகையில் அதிகரித்தமையால் வர்த்தகப் பற்றாக்குறையானது பெருமளவில் அதிகரித்திருந்த போதிலும், 2017 மே மாதத்தில் EU GSP + மீளவும் அமுல்படுத்தப்பட்டமையால் எற்றுமதிகளிலிருந்தான சம்பாத்தியங்களின் பகுதி என்றவகையில் 10% இன் இரட்டிப்பு இலக்க வளர்ச்சியினைப் பதிவு செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சுற்றுலாத்துறையிலிருந்தான சம்பாத்தியங்களை விரிவாக்குதல், உள்நாட்டுச் சேமிப்புக்களின் குறைந்த வளர்ச்சி, வெளிநாட்டு தொழிலாளர்களின் அனுப்புதல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகள், நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளில் நம்பாத்தியங்களை மீள் முதலீடு செய்தல் என்பனவும் வெளியக நடைமுறை கணக்குப் பற்றாக்குறைக்கான பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன் மேலும், மீளாய்வு காலப்பகுதியில் பற்றாக்குறையினை இரட்டிப்பாக்குவதினை முனைப்பாக்கியுள்ளன.

வெளிநாட்டு வர்த்தகத்தின் எதிர்காலப் போக்கானது 2017இல் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் நோக்கு 2025இல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது .அது இலங்கையினை இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாற்றுவது தொடர்பான பொருளாதார உபாயங்களில் கூடிய கவனம் செலுத்துகின்றது .அது இலங்கையின் தலாவீத வருமானமானத்தினை 5, 000அமெரிக்க டொலர் வரையில் அதிகரிப்பதனையும் 1மில்லியன் புதிய வேலைவாய்ப்புக்களினை வழங்குவதனையும் வருடமொன்றிற்கு 5பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நேரடி வெளிநாட்டு முதலீடுகளினை பெற்றுக் கொள்வதனையும் நோக்காகக் கொண்டுள்ளதுடன் மேலும் ,வருடமொன்றிற்கு 20பில்லியன் பெறுமதியான நடைமுறை ஏற்றுமதிகளினை இரட்டிப்பாக்குவதன் மூலம் அடுத்து வரும் சில ஆண்டுகளில் நாட்டின் வருமானத்தினை உயர் நடுத்தர வருமான மட்டத்திற்குக் கொண்டு வருவதைனையும் நோக்கமாக கொண்டுள்ளது.

வெளிநாட்டு வர்த்தக விரிவாக்கமானது இலங்கையினை இந்து சமுத்திரத்தின் ஏற்றுமதி நோக்கில் பொருளாதார கேந்திரம் மிக்க நாடாக இலங்கையினை நிலைநிறுத்துவதில் உறுதுணையாக

இருந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு என்ற வகையில் உலகளாவிய ஏற்றுமதிகளின் குறைந்த பங்களிப்புடன் தொடர்புடைய நடைமுறைச் சவால்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் குறைந்தளவில் பங்களிப்புச் செய்தோர் என்பவை தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஏற்றுமதிப் பொருட்களின் போட்டித் தன்மையினை மேம்படுத்துதல், நெருக்கமான ஏற்றுமதி தொகுப்புக்களினை பல்வகைப்படுத்துதல், ஏற்றுமதிப் பிராந்தியங்களை விரிவுபடுத்துதல், ஏற்றுமதிச் சேவைகளினைக் கண்டறிதல், சர்வதேச சந்தைகளில் ஊடுருவும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை விருத்தி செய்தல், உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன்களை விரிவாக்குதல், உற்பத்தி மற்றும் கைத்தொழில்துறையினை உயர் தரத்திலான பெறுமதி சேர் வகையில் பல்வகைப்படுத்துதலும் மற்றும் உலகளாவிய பெறுமதி சங்கிலிக்கு ஒருங்கிணைக்கும் பொருட்டு பொருட்களை தொழில்நுட்ப ரீதியாக முன்னேற்றுதல் மற்றும் அறிவு சார்ந்த கைத்தொழில்களில் வெளிநாட்டு நேரடு முதலீமுகளினைக் கவருதல் என்பன நாட்டில் நிலையான பொருளாதார வளர்ச்சியினைப் பேணுவதிலும் அத்தகைய அபிவிருத்திகளினை உறுதி செய்வதற்கும் இலக்குகள் மற்றும் நோக்குகளினை அடைவதற்கும் தேவையான பிரதான காரணிகளாக அமைகின்றன.

மேலும், தேவையான தரநிர்ணயம் தொடர்பான பிரச்சனைகள்; பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பரஸ்பர அங்கீகார உடன்படிக்கைகள்; இலங்கையின் வெளிநாட்டு ஏற்றுமதிகளினைப் பாதிக்கின்ற வரியல்லா காரணிகள் ,வியாபார நடவடிக்கைகளினை (WB) இலகுவாக்கும் வகையில் சர்வதேச முதலீடுகளில் உயர் தரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சர்வதேசப் போட்டி (WEF) உள்ளடங்கலான உள்நாட்டு வழங்கல் மற்றும் திறன் கட்டுப்பாடுகள் , ஏற்றுமதிப் போட்டிகள் என்றவகையில் அவை தொடர்பில் இன்னமும் தேவையான விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டியுள்ளன. வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பில், உள்ளக கட்டமைப்பு தொடர்பான முதலீடானது இன்னமும் கைத்தொழில்துறையில் மேம்படுத்தப்படவில்லை. தயாரிப்புக் கைத்தொழில்துறை, விவசாய வியாபாரம் மற்றும் வர்த்தக ரீதியான சேவைகள் தீதான முதலீடானது ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக உள்ளது. எனவே, இலங்கைக்கு அதிக பயன் நிறைந்த முதலீடுகளைக் கவருவது தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

மீளாய்வு காலப்பகுதியில் ,அரசாங்க முயற்சிகள் வர்த்தகப் பங்காளிகளுடன் பொருளாதார ஒருங்கிணைப்புக்கள் மற்றும் விருத்தகளினை ஏற்படுத்துதல் ,உத்தேச வரி நடைமுறைகள் மற்றும் வரி மறுசீரமைப்புக்களை இலகுவாக்குவதனூடாக முதலீட்டாரின் நம்பிக்கையினை மேம்படுத்துதல் ,சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை விருத்தி செய்தல் மற்றும் வியாபாரத் தொழிற்பாடுகளினை வசதிப்படுத்துதல் என்பவை நோக்கியதாக மேற்கொள்ளப்பட்டன .

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக கொள்கையானது, வர்த்தக ஊக்குவிப்பு மற்றும் முதலீட்டினைக் கவரும் வகையிலான இருதரப்பு ,பிராந்திய மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகளினூடாக தற்போதுள்ள சர்வதேச சந்தைகளிலுள்ள சந்தைப் பங்கினை மேலும் விரிவாக்குவது தொடர்பில் தொடர்ந்தும் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. மீளாய்வு காலப் பகுதியில் ,ஒருதலைப்பட்டசமாக ஜீஎஸ்பி திட்டத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியம் ,ஐக்கிய அமெரிக்கா போன்ற பிரதான வர்த்தகப் பங்காளி நாடுகளுடனான பேச்சுவார்த்தைகள் ,மேலும் அதிகளவிலான சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளன. 2010 ஆகஸ்டில் இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் 2017 மே இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீஎஸ்பி பிளஸ் (EU-GSP+) மீளப் பெறப்பட்டமையானது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளமையினைப் பிரதிபலிக்கின்றது. கூட்டு ஆணைக்குழுக்களின் கீழான இருதரப்பு கலந்துரையாடல்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நடவடிக்கைகள் என்பன வர்த்தக ஊக்குவிப்பு தொடர்பில் வர்த்தகப் பங்காளி நாடுகளுடனான பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய விடயங்களுக்குத் தீர்வு காணுதல் என்பவற்றில் முன்னேற்றகரமான சூழ்நிலையினைத் தோற்றுவித்துள்ளது .

இலங்கையானது அதன் வர்த்தகப் பங்காளிகளுடன் ,சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (FTAs) மற்றும் முன்னுரிமைசார்ந்த வர்த்தக உடன்படிக்கைகள் (PTAs) என்பவற்றினூடாக முன்னுரிமைகளின் பயன்பாட்டினை அதிகரித்தல் மற்றும் சந்தை அணுகு முறையினை விரிவாக்குதல் என்பவற்றிற்கான முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் (APTA) நான்காவது சுற்றின் நிறைவு பெற்றதனைத் தொடர்ந்து ,இலங்கையானது 4 ஆவது சுற்று வரிச் சலுகைகளினை அமுலாக்குவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது. தற்போது, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கு மேலதிகமாக , மீளாய்வு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்ட சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது சர்வதேச பெறுமதி சங்கிலி (GVC) தொழிற்பாடுகள் மற்றும் உற்பத்திப் பொருள் பங்கெடுக்கும் வலையமைப்புக்கள் என்பவற்றினூடாக மேலும் முதலீடு மற்றும் வியாபார வாய்ப்புக்களை உருவாக்குவதற்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பல்தரப்பு நோக்கெல்லையில் ,பல்தரப்பு வர்த்தக முறைமையின் அடிப்படையிலான விதிகளினை ஆதரிக்கின்ற உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடாக இருக்கின்ற இலங்கையானது 2016மே இல் ஒப்புதலளிக்கப்பட்ட வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் (TFA) அமுலாக்கத்தில் அக்கறையுடன் ஈடுபட்டு வருகின்றது . சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் இணக்கப்பாடுகளை நிறைவு செய்வது தொடர்பில், இலங்கை அரசாங்கமானது உலக வங்கியின் உதவுகையுடன் “இலங்கை வர்த்தக இணையத்தளம் (SLTIP) “ ஒன்றினை ஆரம்பித்துள்ளது. 2018 ஜூலை 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வர்த்தக இணைத்தளமானது தனியாக இணையத் தளமானது வர்த்தகத்துடன் தொடர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ளது. இது இலகுவாக அணுகும் வகையில் வர்த்தகம் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை உரிய நெரத்தில் வழங்குவதன் மூலம், குறுக்கு எல்லை வர்த்தக வசதிப்படுத்தல் தொடர்பில் பிரதான பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இது குறுக்கு தடைகளை நீக்குவதனூடாக வர்த்தகச் செலவினைக் குறைத்தல் மற்றும் ஏற்றுமதிப் போட்டிதன்மையினை மேம்படுத்துதல் என்பவை தொடர்பில் அக்கறை செலுத்துவதுடன் வர்த்தகத்தினைச் சீராக முன்னெடுப்பதற்கும் வழிவகுக்கும். 41 அக்கறைதாரர்களினால் ஆதரவளிக்கப்படும் SLTIP ஆனது தற்போது வர்த்தகத் திணைக்ள்ளத்தினால் நெறிப்படுத்தப்படுகின்றது.

நீண்ட காலமாக நிலுவையிலிருந்த இலங்கை குவிப்பெதிர்ப்பு, எதிரீட்டுத் தீர்வைகள் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் சட்டவாக்கமானது மீளாய்வு காலப்பகுதியில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குவிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பாதுகாப்பு நடைமுறைகள் சட்டம் என்பன முறையே 2018 மார்ச் 23 ஆம் திகதிய மற்றும் 2018 மார்ச் 19 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து வலுவுக்கு வந்துள்ளது. இது உள்ளூர் சந்தையில் காணப்படும் நியாயமற்ற போட்டியிலிருந்து உள்ளூர் கைத்தொழில்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சட்டமாக்கப்பட்டுள்ளது. வர்த்தக திணைக்களமானது விசாரணைகளினை நடாத்தும் பொருட்டு வர்த்தக திணைக்களத்தில் வர்த்தகம் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கும் அலகொன்றினைத் தாபிக்கமும் செயல்முறையில் ஈடுபட்டு வருகின்றது.


2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது தனியார் துறை நிறுவனங்களுக்கு அறவீட்டும் நோக்குடன் ஏற்றுமதி ஊக்குவிப்பு வாய்ப்புக்கள் மற்றும் வர்த்தக வசதிப்படுத்தல்கள் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது. EU GSP பிளஸ் நிகழ்ச்சித்திட்டம், ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்யும் முறைமை REX, advantages of SLTIP இன் அநுகூலங்கள், வர்த்தக வசதிப்படுத்தல், மூல விதி பகுப்பாய்வு மற்றும் வர்த்தக நிவாரண நடவடிக்கைகள் போன்ற மீளுருவாக்கப்பட்ட அநுகூலங்கள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு கொழும்பு மற்றும் ஏனைய பிராந்தியங்களில் பல்வேறு செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**மொத்த இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் வர்த்தக மீதி – 2010**
**(மில்லியன் அ.டொலர் பெறுமதியில்)**

| ஆண்டு | ஏற்றுமதிகள் | வளர்ச்சி% | இறக்குமதிகள் | வளர்ச்சி% | மொத்த வர்த்தகம் | வர்த்தக மீதி |
|---|---|---|---|---|---|---|
| **2010** | 8,294 | 16.5 | 12,340 | 26.4 | 20,634 | -4,047 |
| **2011** | 10,018 | 20.8 | 19,703 | 59.7 | 29,721 | -9,685 |
| **2012** | 9,181 | -8.4 | 17,889 | -9.2 | 27,069 | -8,708 |
| **2013** | 10,009 | 9.0 | 17,098 | -4.4 | 27,107 | -7,088 |
| **2014** | 11,044 | 10.3 | 19,246 | 12.6 | 30,290 | -8,202 |
| **2015** | 10,212 | -7.5 | 18,989 | -1.3 | 29,201 | -8,777 |
| **2016** | 10,217 | 0.1 | 19,515 | 2.77 | 29,732 | -9,298 |
| **2017** | 11,411 | 11.69 | 21,324 | 9.27 | 32,735 | -9,913 |
| **2018** | 11,687 | 2.42 | 22,069 | 3.50 | 33,756 | -10,382 |

*மூலம்: இலங்கைச் சுங்கம்*


## 2.1 ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயல்நிறைவேற்றம்




2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி சம்பாத்தியமானது 11,687 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளதுடன் இது 2017 இல் 11,411 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததுள்ளது.


இலங்கையின் மொத்த எற்றுமதி சம்பாத்தியங்களில் தைத்த ஆடைக் கைத்தொழிலானது 43% பங்களிப்புடன் முன்னிலை வகித்துள்ளதுடன் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில்


சிறியளவிலான (1%) அதுகரிப்பினைக் காட்டுகின்றது. 2018 இல் இரண்டாவது மிகப் பெரிய ஏற்றுமதி பங்களிப்பினை தேயிலை (15%%) வழங்கியுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திப் பொருட்கள் (8%), கனிய உற்பத்திப் பொருட்கள் (3%) மற்றும் மின்சார இயந்திரம் மற்றும் உபகரணம் (3%) என்பனவும் காணப்படுகின்றன.





2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் மொத்த இறக்குமதி செலவினமானது அதிகரித்துள்ளதுடன் 2017 ஆம் ஆண்டில் 21,324 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்த இறக்குமதி செலவினம் 2018 இல் 22,069 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இது 3.5% வளர்ச்சியினைக் குறிப்பிடுகின்றது. 2018 இல் இலங்கையின் இறக்குமதிக் கூடையானது 18% பங்களிப்பினைக் கொண்டுள்ள கனிய மற்றும் கனிய உற்பத்திப் பொருட்களினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய பிரதான இறக்குமதிப் பொருட்களினுள் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (10%), இயந்திரம் மற்றும் உபகரணம் (7%), மின்சார இயந்திரங்களும் உபகரணங்களும் (6%) மற்றும் துணி வகைகள் என்பனவும் உள்ளடங்குகின்றன.

## 2.2 இலங்கையின் வர்த்தகப் போக்கு 2017 - 2018






## 3. பல்தரப்பு வர்த்தக உறவுகள்

இலங்கையின் பலதரப்பு வர்த்தக உறவுகள் உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) உடன்படிக்கைகள் மீது கூடிய அக்கறையினைக் காட்டியுள்ளன. இலங்கையானது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD), உலக புலமைச் சொத்துக்கள் நிறுவனம் (WIPO), சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் WTO சட்டவிதிக்கான மதியுரை நிலையம் (ACWL) ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றது.

### 3.1 உலக வர்த்தக நிறுவனத்தில் இலங்கையின் பிரதிநிதித்துவம்

#### 3.1.1 உலக வர்த்தக நிறுவன வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் (TFA) கீழான கடப்பாடுகளை நிறைவு செய்தல்

உலகளாவிய வர்த்தக முறைமைக்கான பிரதான படிக்கல்லாக விளங்கும் வகையில், உலக வர்த்தக நிறுவனத்தின் 21 வருட வரலாற்றில் முதலாவது பல்தரப்பு உடன்படிக்கையானது 2017 பெப்ரவரி 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. 81 ஆவது அங்கத்துவ நாடாக விளங்கும்

இலங்கையானது 2016 மே 31 ஆம் திகதியன்று அதன் உறுதிப்படுத்தும் ஆவணத்தினை வைப்பிலிட்டது.

உடன்படிக்கைக்கமைவாக, உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்ட நாடுகள் உடன்படிக்கையின் அமுலாக்கல் திகதியிலிருந்து ஒரு வருட பூர்த்திக்கு முன்பாக அதாவது 2018 பெப்ரவரி 22 இற்கு முன்பாக வகையீட்டு இணக்கப்பாடுகளின் அறிவித்தலினை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. உலக வங்கி குழுமத்தின் உதவுகையுடன் தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவானது (NTFC) இலங்கையின் இறுதி வகையீட்டு இணக்கப்பாடுகளினைத் தயாரித்துள்ளதுடன் இந்த இறுதித் திகதிக்கு முன்பாக அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் வர்த்தக சுதந்திர உடன்படிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. வருட இறுதியில், 114 நாடுகள் வகையீடு ஏ அறிவித்தல்களைச் சமர்ப்பித்துள்ள அதேவேளையில், அவற்றுள் 75 மற்றும் 65 நாடுகள் முறையே வகையீடு ஆ மற்றும் இ இனைச் சமர்ப்பித்துள்ளன.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முழுமையான அமுலாக்கமானது 14.3% சராசரியினால் வர்த்தகச் செலவுகளைக் குறைப்பதற்காக மதிப்பீடு செய்யப்படுகின்றன. இது 47% இனால் இறக்குமதிக்குத் தேவையான சராசரி நேரத்தினைக் குறைப்பதற்கும் மதிப்பீடு செய்யப்படுகின்றதுடன் ஏற்றுமதி காலத்தில் 91% ஆக நிர்ணயிப்பதற்கும் மதிப்பீடு செய்யப்படுகின்றன. 2030 ஆம் ஆண்டளவில், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் அமுலாக்கமானது உலகளாவிய ஏற்றுமதி வளர்ச்சியில் வருடமொன்றிற்கு 2.7% வரையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இது அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் குறைவிருத்தி நாடுகளுக்கான மிகப்பெரிய சம்பாத்தியமாகும். மேலும், இத்தகைய பொருளாதாரங்களில் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் வகைப்படுத்தல் தொடர்பில் சாதகமான விளைவுகளினைக் கொண்டுள்ளது..

### 3.1.2 பல் நாட்டு கூட்டு மையமாக இலங்கையினை ஊக்குவித்தல்

இந்து சமுத்திர கடல்வழிப்பயணத்தில் உபாய வழிமுறையிலான தகுதிநிலையினைக் கொண்ட தாக இலங்கையானது அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் வர்த்தக வசதிப்படுத்தலுக்கான உலகளாவிய சேர்க்கையானது (GATF), வர்த்தக சுதந்திர உடன்படிக்கையின் வினைத்திறன் வாய்ந்த அமுலாக்கலுக்கான அவர்களின் உதவுகையின் பகுதியாக, பல் நாட்டுக் கூட்டு மைய எண்ணக்கருவினை ஊக்குவிப்பதற்கு இலங்கையினைத் தெரிவு செய்துள்ளது. கூட்டமைப்பானது கொழும்பினூடாக பயணிக்கும் இந்தியா மற்றும் ஏனைய அயல் நாடுகளிலிந்தான மற்றும் நாடுகளுக்கான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளில் பெரும்பாலானவற்றின் கப்பல் சரக்கு பரிமாற்று வியாபாரத்தினை விருத்தி செய்வதில் பாரியயவிலான பயன்கள் நாட்டிற்குக் கிடைக்கவுள்ளதை அடையாளங் கண்டுள்ளது.

இந்த கருத்திட்டமானது, இக்கருத்திட்டத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்ட தனியார் மற்றும் அரச துறையினைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் 2018 ஒக்டோபர் 3 ஆம் திகதியன்று கொழும்பில் நடாத்தப்பட்ட வைபவத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டமானது 03 கட்டங்களில் அமுல்படுத்தப்படும். நாட்டின் மேம்பாட்டிற்காக MCCH இனை அனுமதிப்பதற்குத் தேவையான சட்ட மற்றும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளின் வரைபுப் பொதியானது முதலாவது கட்டத்தில் மேற்கொள்ளப்படும். MCC வசதியொன்றிலிருந்து மற்றும் வசதிக்கு கப்பல் சரக்கினை நகர்த்துவதற்குத் தேவையான நேரம் மற்றும் ஆவணப்படுத்தலின் திட்டமிடலும் முதலாவது கட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

உலக கூட்டமைப்பானது, உலக வர்த்தக நிறுவன வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கைக்கமைவாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வர்த்தக மறுசீரமைப்புக்கு அதரவளிக்கின்ற அரச மற்றும் தனியார் பங்குடமையாகும். சர்வதேச தொழில்முயற்சிகளுக்கான வொஷிங்டன் டிசி இனைத் தளமாக கொண்ட நிறுவனம் (CIPE) இலங்கையில்

இக்கருத்திட்டத்திற்கான அனுசரணை வழங்கும் நிறுவனமாகும். வெறிற் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இலங்கை ஐசிசி நிறுவனம் ஆகியன இக்கருத்திட்டத்திற்கான உள்ளூர் கூட்டமைப்பு பங்காளிகளாக இருக்கும் அதேவேளையில் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சானது அரசாங்கத்தின் நேரடி வர்த்தக பங்காளி நிறுவனமாகும்.

### 3.1.3 மீன்பிடி உதவுதொகைகள் மீதான புதிய பல்தரப்பு ஒழுங்குவிதிகள்

ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்கு 14.6 ஆனது சட்டவிரோத, உத்தியோகபூர்வமற்ற மற்றும் ஒழுங்கமைக்கப்படாத மீன்பிடி (IUU) நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பு வழங்குகின்ற அளவுக்கதிகமான, மேலதிக மீன்பிடி என்பவற்றிற்கு வழங்கப்படுகின்ற குறித்த சில உதவுதொகைகளினை 2020 ஆம் ஆண்டளவில் அத்தகைய புதிய உதவுதொகைகளினை அறிமுகப்படுத்துவதனை நிறுத்து வைப்பதற்கு உத்தேசித்துள்ளது.

திருபுபடுத்தப்பட்ட வர்த்தக உதவு தொகைகளின் நெறிமுறையானது உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) உதவுதொகைகள் மற்றும் எதிரீட்டு நடவடிக்கைகள் (SCM) மீதான நோக்கெலைலையின் கீழ் வருகின்றது. மீன்பிடி உதவுதொகைகளினை முகாமை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பவை தொடர்பில் உலக வர்த்தக நிறுவன அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டங்களில் குறிப்பாக 2001 நவம்பர் உலக வர்த்தக நிறுவன டோஹா அமைச்சர்கள் மட்டத்திலான வெளிப்படுத்துகையில் பல தடவைகள் கலந்துரையாடப்பட்டுள்ளன. 28 மற்றும் 31 ஆம் பந்திகள் உதவுதொகைகள் நெறிமுறைகளில் உலக வர்த்தக நிறுவனத்தின் ஈடுபாடு குறித்து விசேடமாக பதிவு செய்துள்ளன.

உலக வர்த்தக நிறுவனமானது கடல்வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிலையாகப் பேணுதலில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற அத்தகைய உதவுதொகைகள் தொடர்பில் தேவையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினை அறிமுகப்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்பு நாடுகளினால் சட்ட ரீதியான இணக்கப்பாடுகளை தாபிக்கும் நோக்குடன் மீன்பிடி உதவுதொகைகள் தொடர்பான வியடத்தில் உலக வர்த்த நிறுவனத்தின் சட்டவிதிகள் தொடர்பில் பேச்சுவார்த்தைக் குழுவில் கலந்துரையாடப்பட்டு வருகின்றன. உத்தேச உதவுதொகை நெறிமுறைகள் பின்வரும் நான்கு (04) விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளன.

- (அ) ஒழுங்கமைக்கப்படாத மீன்பிடிக்கு பங்களிப்பினை வழங்கும் உதவுதொகைகள்
- (ஆ) அளவுக்கதிகமான மீன்பிடிக்குப் பங்களிப்பினை வழங்கும் உதவுதொகைகள்
- (இ) அளவுக்கதிகமான மற்றும் மிகையான கொள்திறனுக்கு பங்களிப்பினை வழங்கும் உதவு தொகைகள்
- (ஈ) வெளிப்படைத்தன்மை, பிணக்குத் தீர்வு, நிறுவனசார் எற்பாடுகள் போன்ற விடயங்களுக்கான குறுக்கு வெட்டு

மீன்பிடித் துறையானது நாட்டின் வாழ்வாதார போசாக்கு, வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வருமானம் என்பவற்றின் பிரதான மூலமாக விளங்குகின்றதுடன் உலக வர்த்தக நிறுவனத்திற்கான இலங்கைத் தூதுக்குழுவானது உலகளாவிய மீன்பிடி வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் முகாமை செய்தல் என்பவை தொடர்பான முன்மொழிவுகளுக்கு பங்களிப்பினை வழங்கும் அதேவேளையில், தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கான கலந்துரையாடல்களிலும் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றது.

நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் இலங்கையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் காத்திரமான பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில், இலங்கையானது 2020 ஆம் ஆண்டளவில் முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன், மீன்பிடி உதவுதொகை நெறிமுறையின் செயல்முறையினை துரிதமாக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு செயல்முறையில் உள்ளடக்கப்பட வேண்டிய நாடாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. உலக வர்த்தக உறுப்புரிமையின் முழுமையான உறுப்புரிமையில் பாதுகாப்புக் குழு உறுப்பு நாடுகளில் 38 நாடுகள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், இலங்கையானது அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நெறிமுறைகள் தொடர்பில் இரண்டு நிபுணர் குழுக்களுக்கிடையில் தற்போது காணப்படும் அறிவு சார்ந்த இடைவெளியினை நிரப்பும் பொருட்டு பிராந்திய ரீதியாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உலக வர்த்தக நிறுவன மற்றும் மீன்பிடி நிபுணர்களுக்கிடையில் திறன் விருத்தி செயலமர்வுகளை பிராந்திய மட்டத்தில் நடாத்துவதற்கு புதிய பிரேரணையொன்றினை அனுப்பி வைத்துள்ளது. இந்த முன்மொழிவானது பேரவை மட்டத்திலான மொத்த உறுப்புரிமையினதும் கவனத்தினைப் பெறும் பொருட்டும் செயலகத்தினைக் கவரும் பொருட்டும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இந்த முன்மொழிவினைத் தொடர்ந்து, தூதுக்குழுவானது ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்காக கொழும்பில் செயலமர்வொன்றினை ஏற்பாடு செய்யுமுகமாக செயலகத்திடம் முன்மொழிவொன்றினைச் சமர்ப்பித்துள்ளது. இந்தக் கோரிக்கையானது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் 2019 மே இல் கொழும்பில் ஆசியாவுக்கான பிராந்திய செயலமர்வொன்றினை நடாத்துவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

### 3.1.4 உலக வர்த்தக நிறுவனத்தில் விவசாயப் பேச்சுவார்த்தைகள்

உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடுகள் விவசாயத் துறையினை மறுசீரமப்பதற்கான நடவடிக்கைகளினை எடுத்துள்ளதுடன் உதவு தொகைகள் மற்றும் சிதைந்து போயுள்ள விவசாயம் சார்ந்த வர்த்தகத்தின் உயர் வர்த்தக தடைகள் என்பன குறித்தும் கவனம் செலுத்தியுள்ளன. இதன் ஒருமித்த நோக்கமானது சந்தை அணுகுமுறையினை அதிகரிக்கும் நியாயமான வர்த்தக முறைமையொன்றினைத் தாபித்தல் மற்றும் உலகளாவிய விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதலாகும்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், இலங்கையானது உள்நாட்டு ஆதரவு (2014-2016) மற்றும் ஏற்றுமதி உதவுதொகைகள் (2015-2017) தொடர்பான வ்விசாய அறிவித்தல்களினை மேற்கொண்டுள்ளது.

## 3.2 இலங்கையில் இ – வர்த்தக தயார் நிலையினை மதிப்பீடு செய்தல்

கைத்தொழில் மற்றும் வர்த்தக சூழலில் ஏற்பட்ட மாற்றத்திலிருந்து பயனைப் பெறும் நோக்குடன் குறிப்பாக, அரசாங்கத்தின் 2025 அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் நாட்டின் டிஜிரல் உள்ளக கட்டமைப்பு தேவைப்பாடுகளினை நிறைவு செய்யும் பொருட்டு தற்போதுள்ள இடைவெளி மற்றும் அதன் இ- வர்த்தக தயார் நிலையானது முன்னுரிமை வாய்ந்ததாக கருதப்படுகின்றது. அங்ராட் ஆனது மாற்றமடைந்து வரும் உலக வர்த்தக சூழலிலிருந்து கிடைக்கப்பெறும் நிலையான பயன்களை உறுதி செய்யும் பொருட்டு அபிவிருத்தியடைந்து வரும் டிஜிரல் பகுப்பினை அறிமுகப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் விருத்தியடைந்த நாடுகள் போன்ற கொடை வழங்கும் முகவராண்மைகள் இ – வர்த்தக உள்க்க கட்டமைப்புக்குத் தேவையான டிஜிரல் தொழில்நுட்பத்தினை விருத்தி செய்வதற்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு

உதவியளிப்பதற்கு இணங்கியுள்ளன. அதற்கிணங்க, அங்ராட் மற்றும் உலக வங்கி என்பவற்றிலிருந்தான சிரேஷ்ட அதிகாரிகளுடன் இ – வர்த்தக உள்ளக கட்டமைப்பினை விருத்தி செய்வதில் இலங்கை நோக்கி கொடை வழங்கும் நாடுகளின் கவனத்தினைக் கவருவதற்காக அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலினை முன்னெடுக்கும் பொருட்டு, ஆரம்ப கட்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த செயற்பாட்டில், முக்கியமான பணிகளில் பெரும்பாலானவை நாட்டின்இ – வர்த்தக தயார் நிலையினை மதிப்பீடு செய்வதனையும் தற்போதுள்ள இடைவெளிகளினை இனங்காணுவதனையும் நோக்காகக் கொண்டவையாகும். அதாவது, தயாரிப்பு மற்றும் வர்த்தகத்தினை அடிப்படையாக கொண்ட செயற்கை நுண்ணாய்வு, தரவு முகாமைத்துவம் மற்றும் இ – வர்த்தகம் என்பவற்றின் பயன்பாடு, வர்த்தக வசதிப்படுத்தல் மற்றும் டிநிரல் கொடுக்கல் வாங்கல் போன்ற இ – வர்த்தக பிரயோகங்களினை பிரயோகிப்பதற்கு அரசாங்க மற்றும் தனியார் துறையின் தேவைப்பாடுகளை னெங்காணுவதேயாகும்.

இலத்திரனியல் வர்த்தக தயார் நிலையின் மதிப்பீடானது, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, தொலைத்தொடர்பு மற்றும் டிஜிரல் உள்ளக ட்டமைப்பு, இலங்கைச் சுங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கி போன்ற, நாட்டின் டிஜிரல் உள்ளக கட்டமைப்பினை விருத்தி செய்வதில் ஈடுபடுகின்ற இணை முகவராண்மைகளுக்கிடையே நெருங்கிய ஒருங்கிணைப்பினைத் தேவைப்படுத்துகின்றது.

### 3.2 திறன் கட்டியெழுப்புக்கான தொழில்நுட்ப உதவுகை

### 3.3.1 உலக வர்த்தக நிறுவன முல விதிகள் மீதான தேசிய செயலமர்வு, 2018 ஒக்டோபர் 30 இலிருந்து 2018 நவம்பர் 01 வரையில், கொழும்பில்.

உலக வர்த்தக நிறுவன மூலவிதிகள் மீதான தேசிய செயலமர்வு கொழும்பில் 2018 ஒக்டோபர் 30 இலிருந்து 2018 நவம்பர் 01 வரையிலான காலப்பகுதியில் உலக வர்த்தக நிறுவனத்தினால் அளிக்கப்பட்ட நிபுணத்துவ ஒத்துழைப்புடன் வர்த்தக திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக தனியார் மற்றும் அரசாங்க துறைகளிலிருந்தான பங்குபற்றாளர்கள் பயனடைந்துள்ளார்கள். இந்த செயலமாவானது உறுதிப்படுத்தல் செயல்முறைகள் உள்ளடங்கலான மூல விதிகளின் நடைமுறை விடயங்கள் உள்ளடங்கலாக உலக சுங்க நிறுவனத்திலிருந்தான வளவாளர் ஒருவரினால் நடாத்தப்பட்டது.

### 3.3.2 வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான உத்தேச தேசிய மட்டத்திலான செயலமர்வு

பல்வேறு உலக வர்த்தக நிறுவனத்தின் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறுபட்ட விசேட மற்றும் வேறுபட்ட ஏற்பாடுகள் தொடர்பில் கொள்கை வகுப்பாளர்களின் அறிவினை விரிவாக்கும் தேவை இனங்காணப்பட்டுள்ளதால், கொழும்பில் தேசிய மட்டத்திலான செயற்பாடு / செயலமர்வு குறித்து கவனம் செலுத்துகின்ற நிறுவனமொன்றிற்காக உலக வர்த்தக நிறுவன செயலகத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஓர் முன்மொழிவாகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 இன் இறுதிக் காலாண்டில் ஏற்பாடு செய்வது குறித்து முதலில் கலந்துரையாடப்பட்டதுடன், எவ்வாறாயினும், இந்நிகழ்ச்சித்திட்டத்தினை திட்டமிடப்பட்டவாறு ஏற்பாடு செய்ய முடிந்திருக்கவில்லை என்பதுடன் 2019 இன் முதலாவது காலாண்டிற்கு ஒத்திவைக்கப்பட்டது. இத்தகைய கவனம் செலுத்தப்பட்ட செயலமர்வானது உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கைகளில்

உள்ளடங்கியுள்ள விசேட மற்றும் வேறுபட்ட ஏற்பாடுகள் தொடர்பான புரிந்துணர்வு இடைவெளிகளை நிப்புவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றதுடன் உலக வர்த்தகத்திற்கு ஒருங்கிணைக்கும் எமது முயற்சிகளில் அத்தகைய ஏற்பாடுகளினை எவ்வாறு வினைத்திறனுடன் பயன்படுத்துவது என்பது குறித்தும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.3.3 மீன்பிடி உதவுதொகை பேச்சுவார்த்தைகள் மீதான ஆசிய மற்றும் பசுபிக்குக்கான பிராந்திய செயலமர்வு

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் மீன்பிடி அதிகாரிகள் மற்றும் வர்த்தக பேச்சுவார்த்தையாளர்களுக்கிடையில் தற்போது காணப்படும் அறிவு சார்ந்த இடைவெளியினை நிரப்பும் நோக்குடன், 2018 இல் நடாத்தப்பட்ட கடந்த பொதுப் பேரவைக் கூட்டத்தில் பிராந்திய மட்டத்தில்திறன் விருத்தி செயலமர்வுகளை நடாத்துவதற்கான முன்மொழிவொன்று அனுப்பி வைக்கப்பட்டது. இந்த முன்மொழிவின் முக்கியத்துவத்தினை உணர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினைத் தொடர்ந்து உலக வர்த்தக நிறுவன செயலகமானது, இந்த முன்மொழிவினை அமுல்படுத்துவதற்குத் தேவையான நிதியனை ஒதுக்கீடு செய்துள்ளது. கொழும்பில் ஆசியாவுக்கான பிராந்திய செயலமர்வினை நடாத்துமாறு இலங்கையினால் விடுக்கப்பட்ட கோரிக்கையானது செயலகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் உலக வர்த்தக நிறுவனம், FAO மற்றும் இந்த செயல்முறையில் ஈடுபடுகின்ற ஏனைய நிறுவனங்களிலிருந்தான நிபுணர்கள் மற்றும் உலக வர்த்தக நிறுவன நிதியிடலுடன் 2019 மே மாதத்தில் இந்த நடவடிக்கையினை ஏற்பாடு செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆசியப் பிராந்தியத்திலுள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்தான பங்குபற்றாளர்கள் கொழும்பில் நடைபெறவுள்ள செயலமர்வில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், இலங்கையானது அனுசரணை வழங்கும் நாடாக இருப்பதால் கட்டமைப்பு ரீதியான கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ள நகரத்தில் நிபிணர்கள் வருகை தரவுள்ளதால் அதன் மூலமான பயன்களையும் பெறக்கூடியதாக இருக்கும்.

### 3.3.4 ஏனைய உலக வர்த்தக நிறுவன தொழில்நுட்ப உதவுகை நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுதல்

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜெனிவாவினைத் தளமாகக் கொண்ட உலக வர்த்தக நிறுவனம் மற்றும் ஏனைய சர்வதேச பொருளாதார நிறுவனங்களினால் அனுசரணை வழங்கப்பட்ட 16 தொழில்நுட்ப உதவுகை நிகழ்ச்சித்திட்டங்களில் வர்த்தக திணைக்களம் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களிலிருந்தான அதிகாரிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களினைக் கொண்டதாக மொத்தமாக 21 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

இத்தகைய தொழில்நுட்ப உதவுகை நிகழ்சித்திட்டங்களினூடாக உள்ளடக்கப்பட்ட தலைப்புக்கள் விவசாயம் மீதான உடன்படிக்கை, புலமைச் சொத்து, சேவை வர்த்தகம், வர்த்தகமும் சுற்றாடலும், *SPS,* அரசாங்க பெறுகைகள், உலகம் சார்ந்த பெறுமதிச் சங்கிலிகள் போன்ற உலக வர்த்தக நிறுவனத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப விடயங்களையும் உள்ளடக்குகின்றது.

## 3.4 அங்ராட் நிறுவனத்துடனான இலங்கையின் ஒப்பந்தம்:

அங்ராட் நிறுவனமானது பலைஸ் டெஸ் நேஷன்களில் 2018 ஒக்டோபர் 22 இலிருந்து 26 வரையில் உலக முதலீட்டு மாநாட்டின் 10 ஆவது ஆண்டு நிறைவுக்கான நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியுள்ளது. மாநாட்டில் 11 நாட்டுத் தலைவர்கள், 55 அமைச்சர்கள், முதலீட்டுத் தலைவர்கள், ஊக்குவிப்பு முகவராண்மைகள் உள்ளடங்கலான 186 நாடுகளிலிருந்தான 6,000 இற்கும் மேற்பட்ட பங்குபற்றாளர்களை கலந்து கொண்டிருந்தார்கள். மேலும், பல்வேறு நாடுகளினைச் சேர்ந்த 1700 தனியார் துறை மற்றும் பங்குப் பரிமாற்ற பங்குபற்றாளர்களும் கலந்து கொண்டார்கள். கௌரவ.

அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் குறித்த மாநாட்டில் பங்குபற்றுவதாகவும் மாநாட்டின் இறுதியில் நடாத்தப்பட்ட உயர்மட்ட சர்வதேச முதலீட்டு உடன்படிக்கைகள் மாநாட்டின் இணைத் தலைமை வகிப்பாரெனவும் எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், கௌரவ அமைச்சரின் வருகையானது இரத்துச் செய்யப்பட்டது. அவர் வருகை தராமையால், உயர் மட்ட மாநாட்டிற்கு கௌரவ சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய அவர்கள் இணைத் தலைமை வகித்த அதேவேளையில், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை ஆகியவற்றிலிருந்தான அதிகாரிகளுடன் இணைந்து முதலீட்டு மாநாட்டில் கலந்து கொண்டார்.

2018 ஜூலையில் நடாத்தப்பட்ட போட்டிச் சட்டம் மீதான அரசாங்கங்களுக்கிடையிலான குழுவின் 17 ஆவது அமர்வின் கூட்டத்தில், போட்டி அதிகாரிகளின் சர்வதேச ஒத்துழைப்பு மீதான நடைமுறைகளினை விருத்தி செய்வது தொடர்பில் ரஷிய சம்மேளனத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட முன்மொழிவுக்கான தனது ஆதரவினை இலங்கை தெரிவித்துள்ளது.

## 3.5 இலங்கையில் குவிப்பெதிர்ப்பு எதிரீட்டு நடவடிக்கைகள் தொடர்பான சட்டவாக்கத்தினை சட்டமாக்குதல்

அக்கறைதாரர்கள் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடன் நீண்ட உசாவுதல்களை மேற்கொண்டதன் பின்னர், வர்த்தக திணைக்களமானது உரிய முகவராண்மைகளின் உதவுகையுடன் இலங்கையின் தேசிய வர்த்தக நிவாரண சட்டவிதிகளினை 2018 இல் நிறைவு செய்துள்ளதுள்ளது. இலங்கையின் வர்த்தக நிவாரண சட்டவிதிகளினைக் கொண்டுள்ள இரண்டு சட்டவாக்கங்கள் அதாவது குவிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமானது 2018 மார்ச்சில் இலங்கைப் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அத்தகைய சட்டங்கள் 2018 மார்ச் 23 ஆம் திகதியன்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடிரசு அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலில் பகுதி II இற்கான இணைப்பாக பிரசிரிக்கப்பட்டன. அச்சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் மூலம், இலங்கையானது வர்த்தக நிவாரண சட்டவிதிகளினைக் கொண்டுள்ள உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடுகளின் பெரும்பான்மையுடன் அவ்வமைப்பினுள் சேர்ந்துள்ளது.

இலங்கையில் உலக வர்த்தக நிறுவனத்தின் கேந்திர மையமாக விளங்குகின்ற இலங்கை வர்த்தக திணைக்களமானது நாட்டில் அண்மையில் சட்டமாக்கப்பட்ட வர்த்தக நிவாரண சட்டவாக்கங்களின் தொழிற்பாட்டிற்குப் பொறுப்பாக விளங்குகின்றது. வர்த்தக திணைக்களமானது வர்த்தக பங்காளிகளினால் மேற்கொள்ளப்படும் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான நிவாரண நடவடிக்கைகள் குறித்து விசாரணைகளினை நடாத்துவதற்கும் பரிந்துரைகளினை மேற்கொள்வதற்குமான பொறுப்பு உரித்தளிக்கப்பட்ட வகையில் திணைக்களத்தில் அர்ப்பணிப்புமிக்க வர்த்தக நிவாரண அலகொன்றினைத் தாபித்துள்ளது. இந்த அர்ப்பணிப்பு மிக்க அலகானது பொருளியலாளர், சட்ட அலுவலர் மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் அலுவலர்கள் குழாமொன்றினைக் கொண்டதான பதவியினைரைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

புதிய சட்டவாக்கங்களிலிருந்தான எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறினை அடையும் பொருட்டு, குறித்த அலகின் பதவியினருக்கு வர்த்தக நிவாரணம் தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பிலும் விரிவான பயிற்சியளித்தலானது மிகவும் முக்கியமானதொரு விடயமாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அத்துடன், வியாபார சமூகம் மற்றும் ஆதரவு நிறுவனங்களுக்கிடையில் சட்ட விதிகளினை வெற்றிகரமாக அமுலாக்குவதற்கு முக்கியமாக பயன்படுத்தப்பட வேண்டிய வர்த்தக நிவாரண ஆவணங்கள் குறித்தும் பொதுவான விழிப்புணர்வினை ஏற்படுத்தப்பட்டுள்ளது. வர்த்தக மன்றங்களினூடாக வர்த்தக திணைக்களமானது புதிதாக சட்டமாக்கப்பட்ட சட்டவிதிகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்சித்திட்டங்களைத் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்துள்ளது. அதே நேரத்தில், கொடை வழங்கும் முகவராண்மைகளின் உதவுகையுடன் திணைக்களமானது தொழிற்பாடு மற்றும் வர்த்தக நிவாரண ஆவணங்களின் பயன்பாடு என்பவை தொடர்பில் தனியார் துறையினரின்

பங்குபற்றுதலுடன் வர்த்தக நிவாரண அலகின் பதவியினருக்குத் தேவையான விரிவான தொழில்நுட்ப அறிவினை வழங்கும் பொருட்டு நன்றாகக் கட்டமைக்கப்பட்ட தொழில்நுட்ப ரீதியான பயிறிசிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### 3.6 உதவு தொகைகளும் எதிரீட்டுத் தீர்வையும் (CVD மேன்முறையீடு)

ஐக்கிய அமெரிக்காவின் உள்நாட்டு இறப்பர் கைத்தொழிலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய நிதி உதவியளிக்கப்பட்ட இறக்குமதிகள் மற்றும் அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட நிதி உதவுகைகளிலிருந்து கிடைக்கக்கூடிய பயன்களை இலங்கையின் நீண்ட தூரம் பயணிக்கும் ரயர் உற்பத்தியாளர்கள் பயன்படுத்துகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக திணைக்களம் மற்றும் ஐக்கிய அமெரிக்க சர்வதேச வர்த்தக ஆணைக்குழு (USITC) என்பவற்றில் ஐக்கிய அமெரிக்க கைத்தொழில் துறையினால் தாக்கல் செய்யப்பட்ட எதிரீட்டுத் தீர்வை தொடர்பான முறைப்பாட்டின் அடிப்படையில், ஐக்கிய அமெரிக்க வர்த்தக திணைக்களமானது (USDOC) இலங்கையிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுக்கான OTR ரயர்களின் இறக்குமதிகள் மீதான எதிரீட்டுத் தீர்வை (CVD) விதிப்பினை நோக்காகக் கொண்டு உதவுதொகைகள் மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் குறித்து விசாரணைகளினை ஆரம்பித்தது.

இத்தகைய விசாரணைகளின் பின்னர், 2017 ஜனவரி 04 ஆம் திகதியன்று ஐக்கிய அமெரிக்க வர்த்தக திணைக்களத்தினால் இலங்கையிலிருந்து OTR ரயர்களை இறக்குமதியின் மீது 2.18 சதவீதம் விதிக்கப்பட்டதாகவும் எதிரிட்டுத் தீர்வைகள் தொடர்பில் அதன் இறுதித் தீர்மானத்தினை அடையப் பெற்றுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இலங்கை வர்த்தக திணைக்களமானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், இலங்கையில் பாதிக்கப்பட்ட ஏற்றுமதியாளர், சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து முறைப்பாட்டாளரின் கோரிக்கைகள் தொடர்பில் மீளவும் விசாரணைகளினை ஆரம்பிக்குமாறு ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக திணைக்களம் மற்றும் சர்வதேச வர்த்தக ஆணைக்குழு என்பவற்றிற்கு பல்வேறு முறைப்பாடுகளினை மேற்கொண்டுள்ளது. 2.18 சதவீத எதிரீட்டுத் தீர்வைகள் விதிக்கப்பட்டதன் பின்னர், இலங்கை வர்த்தக திணைக்களத்தினால் ஏனைய வரிசை முகவராண்மைகள் மற்றும் உள்ளூர் கம்பனி என்பவற்றுடன் இணைந்து ஐக்கிய அமெரிக் சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் இனால் சவாலான தீர்மானம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளினை எடுத்துள்ளது. இலங்கை அரசாங்கத்தினால் வினைத்திறன் வாய்ந்த மேன்முறையீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, 2018 ஜூலை 11 ஆம் திகதியன்று ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச வர்த்தக நீதிமன்றமானது நீக்கப்பட வேண்டிய இலங்கையின் உதவுதொகை திட்டங்களில் ஒன்றிற்கு 0.95 சத வீத எதிரீட்டுத் தீர்வைகள் சேர்ந்துள்ளது. இந்த நீக்குகையுடன், ஐக்கிய அமெரிக்க வர்த்த திணைக்களத்தினால் விதிக்கப்பட்டு இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கான ரயர்கள் இறக்குமதி மீதான எதிரீட்டுத் தீர்வைகளின் மொத்தம் உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கைகளில் விதித்துரைக்கப்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் மீது எதிரீட்டுத்தீர்வைகளினை விதிப்பதற்கு குறைந்தது 2% எல்லைக்குறு மட்டத்திறைகு குறைவான வீழ்ச்சியினை அடையப் பெற்றுள்ளது. இது இலங்கையிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் OTR ரயர்களின் ஏற்றுமதி மீது 2.18 எதிரீட்டுத் தீர்வைகளினை விதிப்பதனை முடிவுறுத்துவதற்கான வழியாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும், ஐக்கிய அமெரிக்க வர்த்தக திணைக்களமானது இந்த முடிவுக்கெதிராக மேன்முறையீடு செய்துள்ளது. ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒன்றிணந்து திணைக்களமானது முறையான வகையில் மேன்முறையீட்டிற்குத் தேவையான சமர்ப்பித்தல்களினை மேற்கொண்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, ஐக்கிய அமெரிக்காவின் மேன்முறையீடானது நிராகரிக்கப்பட்டது.

## 3.7 வர்த்தக நிவாரண பிரிவு

வர்த்தக திணைக்களமானது 2018 மார்ச்சில் தாபிக்கப்பட்ட குவிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வர்த்தக நிவாரணப் பிரிவொன்றினைத் தாபித்துள்ளது. இரண்டு சட்டங்களும் வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திற்கு குவித்தல் பொருட்கள், பதலீட்டுப் பொருட்கள் மற்றும் இறக்குமதி மிகைகள் என்பவை தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான அதிகாரத்தினை வழங்குகின்றதுடன் அத்தகைய சட்டங்களை வினைத்திறனுடன் அமுல்படுத்துவதற்கான பரிந்துரைகளினையும் வழங்குகின்றது.

வர்த்தக நிவாரணப் பிரிவானது திணைக்களத்தின் முறையான பதவியணியிலிருந்தான எட்டு அலுவலர்களினைக் கொண்டுள்ளதுடன் இப்பிரிவானது இப் பிரிவுக்கென ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போதே நிரந்தரமாக இணைக்கப்பட்ட சட்ட அலுவலர் மற்றும் பொறியியலாளர் எனும் இரண்டு அர்ப்பணிப்பு மிக்க அலுவலர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

வர்த்தக திணைக்களமானது பிரிவின் தாபித்தல் தொடர்பில் பின்வரும் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது;

1) சட்ட அலுவலர் மற்றும் பொருளியலாளரை (economist) ஆட்சேர்ப்புச் செய்தல்
2) சட்டத்துடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளுக்கு இறுதி வடிவம் கொடுத்தல்
3) விசாரணைகளுடன் தொடர்புடைய ஆவணங்களை நிறைவு செய்தல்.
4) கணிப்பீடுகள், தரவு சேகரிப்பு, சட்டத் தேவைப்பாடுகள் உள்ளடங்கலான விசாரணகைளினை முன்னெடுப்பதற்கு அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல்.
5) இத்தகைய சட்டங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் தனியார் துறைக்குப் பயிற்சியளித்தல்.

மேற்குறித்த சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கெதிராக பொருட்களின் மூல விதியினை இனங்காணும் பொருட்டு தேவையானதாக இருக்கக்கூடிய முன்னுரிமை சாராத முன்னுரிமை விதிகளுடன் இது தொடர்புடையதாகும். இலங்கையானது முன்னுரிமை சாராத மூலவிதிகளுக்கான சட்ட ரீதியான ஏற்பாடொன்றினைத் தற்போது கொண்டிருக்கவில்லை. எனவே, வர்த்தக திணைக்களமானது, அடுத்த வருடத்தில் இலங்கைச் சுங்கம் மற்றும் அத்தகைய திட்டத் தயாரிப்புக்குரிய ஏனைய நிறுவனங்களுடன் தொடர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடும்.

## 3.8 இலங்கை வர்த்தக தகவல் இணையம் (SLTIP)

இலங்கை வர்த்தக தகவல் இணையமானது இலங்கையிலிருந்து மற்றும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றவற்றுடன் தொடர்புடைய அனைத்துத் தகவல்களுக்குமான தனியான நிறுத்தல் மையமாகும். இந்த வர்த்தக தகவல் இணையமானது ஏற்றுமதி / இறக்குமதி செயல்முறையில் ஈடுபடுகின்ற அனைத்து அரசாங்க மற்றும் அரை அரசாங்க முகவராண்மைகளின் சார்பில் வர்த்தக வர்த்தக திணைக்களத்தினால் நிதியளிக்கப்படுகின்றது. இந்த இணையத்தளத்தில், வர்த்தகர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேவையான அனைத்து ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட தேவைப்பாடுகள் பற்றிய தகவலினைப் பெற்றுக் கொள்ள முடியும். இத்தகைய

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தேவைப்பாடுகள் அரசாங்க மற்றும் அரை அரசாங்க முகவராண்மைகளின் எண்ணிக்கையுடன் தொடர்பு படலாம்..

வர்த்தக திணைக்களமானது SLTIP இற்கு தகவலினை அளிக்கின்ற அதன் அக்கறைதார்களிலிருந்து TIP இன் 100% உறுதிப்பாட்டினைக் கொண்டுள்ள அர்ப்பணிப்பு மிக்க எட்டு அலவலர்களைக் கொண்ட குழுவொன்றினை நியமித்துள்ளது. மேலும், அவர்கள் தொடர்ச்சியாக தகவல்களை அளிப்பதனை உறுதி செய்யும் பொருட்டு SLTIP தகவல்களை அளிக்கின்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

வர்த்தக திணைக்களமானது மத்திய மற்றும் வட மேல் மாகாண வர்த்தக மற்றும் கைத்தொழில் பிராந்திய மன்றம் மற்றும் சர்வதேச வர்த்தக நிலையம் என்பவற்றுடன் கூட்டுச் சேர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிதியளிக்கப்பட்ட 2018 இன் நான்காம் காலாண்டில் இலங்கை வர்த்தக தகவல் மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ச்சியாக நடாத்தியுள்ளது. மேலும், நாட்டின் நகர மற்றும் பிராந்திய பகுதிகளில் அமைந்துள்ள SLTIP இன் பயன்கள் குறித்து ஏற்றுமதியாளர்களுகிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு கொழும்பில் வர்த்தக மன்றங்களுடன் ஒன்றிணைந்து திணைக்களத்தினால் மூன்று செயலமர்வுகள் எற்பாடு செய்யப்பட்டன.

2018 டிசம்பரில், வர்த்தக திணைக்களமானது ITC உடன் ஒருங்கிணைந்து படிப்படியான நடைமுறைகளினூடாக உற்பத்திப் பொருட்களை அடையாளங் காண்பதன் மூலம் தற்போதைய இணையத்தளத்தின் பயனர் – நட்புணர்வினை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு தொழில்நுட்ப உதவுகை அமர்வுகளினை நடாத்தியுள்ளது.

## 4. இருதரப்பு வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பு

### 4.1 இந்திய இலங்கை சுதந்திர உடன்படிக்கை

2000 இலிருந்து செயற்பாட்டுக்கு வந்துள்ள இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது (ISFTA) இந்திய சந்தைக்கு இலங்கையின் ஏற்றுமதிகளை விரிவாக்குவதில் தனது கணிசமான பங்களிப்பினைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 2018 இல் 768.71 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்துள்ளதுடன் இது 2017 இல் 689.48 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்துள்ளதுடன் வருடத்திற்கு வருடம் 11% வளர்ச்சியனைப் பதிவு செய்துள்ளது. 2018 இல் இந்தியாவுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 63% இற்றும் அதிகமானவை ISFTA வரிச் சலுகைகளின் கீழ் இடம் பெற்றுள்ளன. அதற்கிணங்க, இலங்கையானது ISFTA இன் கீழ் இந்தியாவுக்கு 481 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளதுடன் கடந்த ஆண்டின் ஒத்திசைவான காலப்பகுதியில் 47% இற்கும் மேற்பட்ட வளர்ச்சியினைப் பதிவு செயதுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பயனைப் பெறுகின்ற பிரதான உற்பத்திப் பொருட்களில் தளபாடம், MDF பலகைகள் விலங்குணவுகள் ,காப்பளிக்கப்பட்ட செப்புக் கம்பிகள் , போத்தல் குளிரூட்டிகள், மின்சார இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உதிரிப்பாகங்கள், மெருகூட்டப்பட்ட மாபிள்கள், கண்ணாடிப் போத்தல்கள், இறப்பர் கையுறைகள், காற்றமுத்தத் ரயர்கள், கொக்கா உற்பத்திகள், பதப்படுத்தப்பட்ட இறைச்சி உற்பத்திகள், பீங்கான மேசைப் பொருட்களும் தரை ஓடுகளும், பல்வேறு வகைப்பட்ட உணவுத் தயாரிப்புக்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் விலங்குணவு போன்றவை உள்ளடங்குகின்றன.

வர்த்தக திணைக்களமானது, இலங்கை – இந்திய பொருட்களின் வர்த்தகத்தில் மறைந்திருக்கின்ற ஏதேனும் ISFTA உடன் தொடர்புடைய பிரச்சனைகளை தீர்ப்பதில் இந்திய தரப்பினைப் போலவே சம்பந்தப்பட்ட உள்நாட்டு அக்கறைதாரர்களுடன் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. இது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும் பிரதான விடயங்களில் தைத்த ஆடைகள் மற்றும் கறுப்பு மிளகு போன்ற உற்பத்திப் பொருட்களின் மீது இந்தியாவினால் விதிக்கப்பட்ட கணியக் கட்டுப்பாடுகளை நீக்குதல், சுங்க வெளியகற்றுதல், தேயிலை ஏற்றுமதிகுளடன் தொடர்புடைய மாதிரிச் சோதனை நடைமுறைகள், மேலதிக ஆவணப்படுத்தல் கட்டணங்கள் மற்றும் தாமதங்கள், இலங்கையின் கப்பல் கட்டுமானக் கைத்தொழில் மற்ற்றும் குறித்த சில ஏனைய தரிவல்லா நடவடிக்கைகளுக்கான இந்திய அரசாங்கத்தின் பெறுகை கேள்வி மனுக்களைக் கொருதல் என்பன உள்ளடங்குகின்றன.

இந்திய உயர் ஸ்தானிகராலயத்துடன் கூட்டிணைந்து, வர்த்தக திணைக்களமானது இந்திய ஏற்றுமதிச் சமுகத்தின் பயனுக்காக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தியாவின் பொருட்கள் மற்றும் சேவைகள் (GST) மீதான கருதரங்கொன்றினையும் ஏற்பாடு செய்துள்ளது. கொழும்பில் 2018 மார்ச் 23 ஆம் திகதின்று நடாத்தப்பட்ட கருத்தரங்கானது இந்தியாவின் மத்திய மதுவரி மற்றும் சுங்க சபையின் GST கொள்கைப் பிரிவிலிருந்தான அதிகாரிகள் குழுவொன்றினால் நடாத்தப்பட்டது. இந்தியாவின் மத்திய மற்றும் மாநில மட்டத்தில் முன்னதாக சேகரிக்கப்பட்ட பல்வேறு வகையான வரிகள் இந்திய சந்தையில் இலங்கை ஏற்றுமதியாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட பிரதான இடர்பாடுகளில் முதன்மை வாய்ந்ததாகும். எவ்வாறாயினும், **GST** அறிமுகப்படுத்தப்பட்டதும் இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் எதிர்நோக்க்பட்ட பிரச்சனைகளில் பெரும்பாலானவைக்குத் தீர்வு காணப்பட்டது.

### 4.2 இலங்கை - இந்திய பாகிஸ்தான் உடன்படிக்கை (PSFTA)

2005 இல் செயற்பாட்டிற்கு வந்த இலங்கை - பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும் இரண்டு நாடுகளுக்குமிடையில் இருதரப்பு வர்த்தகத்தினை விரிவாக்குவதில் கணிசமானளவு பங்களிப்பினை வழங்கியுள்ளன. PSFTA இன் இடம்பெற்ற 50.72 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய ஏற்றுமதிகளில் 75.94 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானவை பாகிஸ்தானுக்கான ஏற்றுமதிகளின் பெறுமதியாகும். PSFTA இன் கீழ் இலங்கையினால் ஏற்றுமதி செய்யப்படும் பிரதான ஏற்றுமதிப் பொருட்களினுள் தேங்காய்கள், வெற்றிலை, உலர்த்திய தேங்காய், எம்டிஎப் பலகைகள் மற்றும் கறுப்புத் தேயிலை என்பன உள்ளடங்கும் அதேவேளையில் அதே காலப்பகுதிக்கான PSFTA இன் கீழான இறக்குமதிகளில், கோதுமை, மெஸ்லின், அரிசி, மிதக்கும் கண்ணாடிகள், எலுமிச்சைப் பழங்கள், உருக்கு ரியுப்புக்கள் என்பனவும் உள்ளடங்குகின்றன.

### 4.3 ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தக மற்றும் முதலீட்டு வசதிப்படுத்தல் உடன்படிக்கை (TIFA)

ஐக்கிய அமெரிக்க – இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு செயல்முறையிலான உடன்படிக்கையின் (TIFA) கீழ் கூட்டுப் பேரவைக் கூட்டத்தின் (JCM)13 ஆவது அமர்வு இலங்கையில் 2018 டிசம்பரில் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஒரு சில தவிர்க்க முடியாத காரணங்களினால், அமெரிக்க தரப்பானது 2019 இன் முதலாவது காலாண்டு காலப்பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதன் பின்னர், ஐக்கிய அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதித்துவ அலுவலகமானது, இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் முதலீடு என்பவற்றினை ஊக்குவிக்கும் நோக்குடன் கூட்டுப் பேரவைக்

கூட்டத்தின் 12 ஆவது அமர்வின் போது பின்பற்றப்பட்ட கூட்டுச் செயல்திட்டத்தினை மீளாய்வு செய்யுமாறு தற்போது கோருகின்றது. இதன் விளைவாக, USTR ஆனது கூட்டுப் பேரவைக் கூட்டத்தின் 13 ஆவது அமர்வினை அட்டவணையிடுவதற்கு முன்பாக ஆறு பிரதான விடயங்களில் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் வினாவியுள்ளது.

வர்த்தகத் திணைக்களமானது பின்வரும் விடயங்கள் தொடர்பில் இலங்கையின் நிலைப்பாட்டினை விளக்கும் நிலைப்பாட்டுப் பத்திரமொன்றினைச் சமர்ப்பித்துள்ளது.

i. உலக வர்த்தக நிறுவன தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கைகயில் இணைதல் (ITA)

ii. வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் அமுலாக்கம் (TFA)

**iii.** சார்பு நிலையான தரிவுகள் மற்றும் வரிகள் தொடர்பான அறிவார்ந்த விளக்கம்

iv. புலமைச் சொத்து உரிமைகளின் (IPRs) வலுவாக்கமும் புத்தாக்கமும்

v. வியாபார விடயங்களினை இலகுவாக்குதல்

### 4.4 சிங்கப்பூர் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

வர்த்தக திணைக்களமானது வர்த்தக நிவாரணங்கள், அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதெச வர்த்தக அமைச்சுக்கான பொருட்கள் மற்றும் சேவைகள் போன்ற ஒரு சில விடயங்கள் தொடர்பில் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவ சேவைகளினை வழங்கி வருகின்றது.

### 4.5 கூட்டு ஆணைக்குழுக்கள்:

#### 4.5.1 வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான குவைற் – இலங்கை கூட்டு அமைச்சர்கள் மட்டத்திலான குழு

வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான குவைற் – இலங்கை கூட்டு அமைச்சர்கள் மட்டத்திலான குழுவின் (JMCTT) 2 ஆவது அமர்வானது குவைற்றில் 2018 ஒக்டோபர் 8 – 11 வரையில் நடாத்தப்பட்டது.
இரண்டு தரப்பும் இருதரப்பு உறவுகளை விரிவாக்குவது தொடர்பான பல்வேறு முக்கியமான விடயங்களில் குறிப்பாக வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட துறைகளில் முடிவுகளினை அடையபெற்றுள்ளன. அதற்கிணங்க, இலங்கையானது குவைற்றில் தெரிவு செய்யப்பட்ட சர்வதே வர்த்தக கண்காட்சிகளில் பங்குபற்றுதல் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு நிகழ்வுகளினை ஏற்பாடு செய்வது தொடர்பான சாத்தியப்பாடுகளை ஆராய்வதிலும் கவனம் செலுத்தவுள்ளது.

இலங்கையானது குவைற் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் (KCCI) கவனத்திற்காக முதலீட்டு முன்மொழிவுகளினைச் சமர்ப்பிக்கவுள்ளது. உள்ளார்ந்த குவைற் முதலீட்டாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இரண்டு நாடுகளினதும் வர்த்தக சமூகங்களுக்கிடையிலான உறவுகளை விரிவக்கும் பொருட்டு, தேசிய வர்த்தக சம்மேளனம் (NCC) மற்றும் குவைற் வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றம் (KCCI) என்பன தமக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்திக் கொள்வதற்கு உடன்பட்டுக் கொண்டன. இது தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை வரைபொன்று குவைற் தரப்பிடம் ஏற்கனவே சமர்பிக்கப்பட்டுள்ளது. JMCTT இன் 2 ஆவது அமர்வின் போது அடையப்பெற்ற தீர்மானங்கள் விரைவாக அமுல்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு உரிய அக்கறைதாரர்களுடன் இது தொடர்பில் கூட்டமொன்று 2018 ஒக்டோபரில் நடாத்தப்பட்டது.

### 4.5.2 பொருளாதார ஒத்துழைப்புக்கான இலங்கை – ஈரானிய கூட்டு ஆணைக்குழு

பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் 11 ஆவது அமர்வின் செயற்குழுக் கூட்டமானது கொழும்பில் 2018 பெப்ரவரி 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இக் கூட்டத்தில் இரண்டு தரப்புக்களும் 11 சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்துள்ளதுடன் கூட்டு ஆணைக்குழுவின் 12 ஆவது சுற்றுக்கு முன்பாக நிலுவையாகவுள்ள தீர்மானங்களை அமுலாக்குவதற்கும் உடன்பட்டுக் கொண்டன. மேற்குறித்த கூட்டத்தில் ஆராயப்பட்ட பிரதான விடயங்களில் ஒன்று இரண்டு நாடுகளுக்குமிடையில் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்குப் பொருத்தமான வங்கி மற்றும் கொடுப்பனவு முறைமையொன்று இல்லாமையாகும். இலங்கை வர்த்தக திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் கவனத்திற்கு இந்த விடயத்தினைக் கொண்டு வந்துள்ளது.

குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில், 2018 மே 13 ஆம் திகதியன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தெஹிரானுக்கு விஜயம் மேற்கொண்ட போது இரண்டு நாடுகளுக்குமிடையில் ஐந்து பரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

2018 ஆகஸ்ட் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடாத்தப்படவிருந்த கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தின் 12 ஆவது அமர்வானது பின்னர் 2019 இற்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 5. பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கையானது அதன் பிராந்திய வர்த்தகம் மற்றும் APTA, SAPTA, SAFTA, BIMSTEC மற்றும் IORA எனும் பெயருடைய பொருளாதார ஏற்பாடுகளில் தொடர்ந்தும் பிரதான பாத்திரத்தினை வகித்து வருகின்றது.

### 5.1 சார்க் முன்னுரிமை சார்ந்த வர்த்தக உடன்படிக்கை (SAPTA)

பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய கூட்டமைப்பு (SAARC) 1985 இல் தாபிக்கப்பட்டதாகும். சார்க்கின் உறுப்பு நாடுகளாக ஆப்கானிஸ்தான, பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை என்பன விளங்குகின்றன. சார்க் அமைப்பானது ஆரம்ப கட்டத்தில், சுகாதாரம், சனத்தொகை, அளவீட்டுஇயல், தொலைத்தொடர்பு, விளையாட்டுக்கள், கலாசாசரம் போன்ற மென் துறைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 1988 டிசம்பரில் இஸ்லாமபாத்தில் நடாத்தப்பட்ட நான்காவது சார்க் மாநாடானது சார்க்கின் சட்டவரையறைகளுக்குட்பட்ட நடவடிக்கைகளின் உறுதியான பெறுபேறு குறித்து வலியுறுத்தியுள்ளது. அதற்கிணங்க, சார்க் நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தக எண்ணகருவானது 1991 டிசம்பரில் கொழும்பில் நடாத்தப்பட்ட ஆறாவது சார்க் மாநாட்டில் இலங்கையினால் முதல் தடவையாக பேச்சுவார்த்தைக்காக முன்வைக்கப்பட்டது. தென்னாசிய முன்னுரிமை சார்ந்த வர்த்தக ஏற்பாடானது (SAPTA) 1993 ஏப்பிரல் 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டு 1995 டிசம்பர் 7 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. இந்த உடன்படிக்கையானது, வரிச் சலுகைகளினை பரிமாற்றுவதனூடாக சார்க் பிராந்தியத்தில் பரஸ்பர வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை நிலையாகப் பேணுவதற்கும் ஊக்குவிப்பதற்குமான உறுப்பு நாடுகளின் விருப்பத்தினைப் பிரதிபலிக்கின்றது. SAPTA ஆனது சுங்கக் கூட்டமைப்பொன்றினை தாபிக்கும் நோக்கில் தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசமொன்றிற்கு (SAFTA) மாற்றம் பெறுவதனை நோக்கியதாக முதலாவது நடவடிக்கை இடம்பெற வேண்டுமென

உணர்ந்து கொண்டுள்ளது. இதனால் SAPTA ஆனது தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசத்தினால் (SAFTA) படிப்படியாக நீக்கப்படுகின்றது. எனவே, SAPTA இன் கீழான தரிவு முன்னுரிமையின் பயன்பாடானது படிப்படியாக குறைவடைந்து வருகின்றது.

SAPTA இன் கீழான இலங்கையின் ஏற்றுமதிகள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 4.49 மற்றும் 3.52 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளது. SAPTA இன் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பிரதான உற்பத்திப் பொருளாக நூல் இழையினாலான முடிச்சுக்களுடன் கூடிய துணி வகைகளினைத் தொடர்ந்து துளைகளற்ற இறப்பர் துண்டுகள் விளங்குகின்றன. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது SAPTA இன் கீழ் 241 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்கியுள்ளது.

## 5.2 தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் (SAFTA) கீழான பேச்சுவார்த்தைகளினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல்

தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA) 2004 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டு 2006 ஜனவரியிலிருந்து அமுலுக்கு வந்தது. தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA)ஆனது 1995 இல் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் (SAPTA) தாபித்தலுடன் ஆரம்பித்த முன்னுரிமை வர்த்தக ஊக்குவிப்பினூடாக பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை மேலும் விரிவாக்குவதனை நோக்காகக் கொண்டது.

முன்னுரிமை சார்ந்த வர்த்தக ஊக்குவிப்பினூடாக பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பினை மேலும் விரிவாக்கும் நோக்குடன் SAPTA நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக தென்னாசிய சுதந்தர வர்த்தகப் பிரதேசம் (SAFTA) தொடர்பான உடன்படிக்கையானது இஸ்லாமாபாத்தில் நடாத்தப்பட்ட 12சார்க் மாநாட்டின் போது 2004ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டதுடன் இது 2006 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது. இதனால், SAPTA இன் கீழான தரிவு முன்னுரிமைகள் குறைவடைந்துள்ளதுடன் SAFTA இனால் நீக்கப்பட்டுமுள்ளது. SAARC உறுப்பு நாடுகள் சுதந்திர வர்த்தக பிரதேசம், சுங்க கூட்டமைப்பு, பொதுவான சந்தை மற்றும் பொதுவான பொருளாதார மற்றும் நாணயச் சங்கம் என்பவற்றினைக் கொண்டதாக தென்னாசிய பொருளார கூட்டமைப்பினை (SAEU) உருவாக்குவதன் மூலம் பிராந்திய பொருளாதார நல்லிணக்கத்தினை விரிவாக்குவதற்கு எண்ணியுள்ளன. இந்த இணக்கப்பாடானது 2014 இல் இறுதியாக நடாத்தப்பட்ட 18 ஆவது சார்க் மாநாட்டில் புதுப்பிக்கப்பட்டது.

### 5.2.1 தரிவுக் குறைப்புக்களும் SAFTA இன் கீழான நெகிழ்வுப் பட்டியல்களும் (கட்டம் - I, II மற்றும் III)

SAFTA ஆனது இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளினை குறை விருத்தியல்லா நாடுகளாகவும் (NLDCs) குறைவிருத்தி நாடுகளாக (LDCs) ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், மாலைதீவு மற்றும் நேபாளம் போன்ற நாடுகளினையும் இனங் கண்டுள்ளது. SAFTA இன் கீழான இலங்கையின் நெகிழ்வுப் பட்டியல்கள் தொடர்பில் ஆறு இலக்க மட்டத்திலான (H.S.2002 version) உற்பத்திப் பொருட்களின் இலக்கமானது 1065 ஆகும். இலங்கையானது 2015 நவம்பர் 21 ஆம் திகதியன்று வர்த்தக சுதந்திரமளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் அதன் தரிவு சுதந்திரமளித்தல் இணக்கப்பாட்டினை பூர்த்தி செய்துள்ளது. வர்த்தக சுத்தந்திரமளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடர்பிலும் (நெகிழ்வுத் தன்மை வாய்ந்த பட்டியலின் குறைப்பு) வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து உறுப்பு நாடுகளினாலும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டத்தின் கீழ், உறுப்பினர்கள்

அவர்களின் ஆரம்ப நெகிழ்வுப் பட்டியல்களில் ஆகக்குறைந்தது 20% குறைப்புச் செய்வதற்கு உடன்பட்டுக் கொண்டன. SAFTA (கட்டம்-III) இன் கீழான நெகிழ்வுத் தன்மை வாய்ந்த பட்டியல்களில் குறைப்புச் செய்வது தொடர்பான தொழிற்படு குழுவின மூன்றாவது கூட்டம் 2015 ஜூலை 6 ஆம் திகதி நடாத்தப்பட்டது. SAFTA (கட்டம்-III) இன் கீழான நெகிழ்வுத் தன்மை வாய்ந்த பட்டியல்களில் மேலும் குறைப்புச் செய்வது தொடர்பான விடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் போன்ற உறுப்பு நாடுகளிலிருந்தான தூதுக்குழுக்கள் SAFTA இன் கீழான தமது நெகிழ்வுத் தன்மை வாய்ந்த பட்டியல்களினை 20% இனால் குறைப்பதற்கு இணங்கிக் கொண்டன. இந்தியாவானது குறிவிருத்தியல்லா நாடுகளுக்கு மட்டும் 20% குறைப்புச் செய்வதற்கு உடன்பட்டுக் கொண்டதுடன் இந்தக் கூட்டத்தில் 10% இனால் SAFTA இன் கீழான நெகிழ்வுப பட்டியல்களைக் குறைப்பதற்கு இலங்கையும் உடன்பட்டுக் கொண்டது.

“SAFTA இன் பாதகப் பட்டியலினை குறைப்பது தொடர்பான விசேட முன்மொழிவு” எனும் தலைப்பில், உறுப்பு நாடுகள் 2012 ஜூன் 18 ஆம் திகதியன்று காத்மண்டுவில் சார்க் செயலகத்தில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட அல்லது தற்காலிகமான அடிப்படையில் 2015 ஜூலை 04 ஆம் திகதியன்று இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற SAFTA நிபுணர் குழுவின் விசேட கூட்டத்தில் தமது முன்மொழிவுகளினைச் சமர்ப்பித்துள்ளன.

### 5.2.3 தென்னாசிய பொருளாதார கூட்டமைப்பு (SAEU): பிராந்திய பொருளாதார நல்லிணக்க ஆய்வு (கட்டம்-II)

2014 நவம்பர் 23 – 24 ஆம் திகதிகளில காத்மண்டுவில் நடாத்தப்பட்ட நிலையியல் குழுவின் நாற்பத்தியோராவது அமர்வானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிமற்றும் தொழில்நுட்ப உதவுகையுடன் நிறைவு செய்யப்பட்ட பிராந்திய பொருளாதார நல்லிணக்க ஆய்வின் முதலாவது வரைபினை கவனத்தில் எடுத்து அங்கீகாரம் வழங்கியுள்ளது. பொதுவான வெளியக தரிவுகளை சூழ்ந்துள்ளதாக (சுங்க கூட்டமைப்பில்) அல்லது உடனடியாக பொதுவான நாணயமொன்றாக தென்னாசிய பொருளாதார கூட்டமைப்பானது புரிந்து கொள்ள முடியாத அய்வு என வலியுறுறத்திக் கூறியுள்ளது இங்கு முக்கியத்துவம் வாய்ந்த்தாகும்..

நிலையியல் குழுவானது தென்னாசிய பொருளாதார கூட்டமைப்பினை (SAEU) நோக்கியதாக நகருவதற்கான அமுலாக்கல் நோக்கத்திற்காக ஆய்வில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு முன்னுரிமை வழங்கும் பொருட்டு 2015 இன் முதலாவது காலாண்டில் நடாத்தப்படலாமென வர்த்தக மற்றும் நிதி அமைச்சுக்களின் பிரதிநிதிகளின் விசேட கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், பிராந்திய பொருளாதார நல்லிணக்க ஆய்வு தொடர்பில் இரண்டு SAARC-ADB விசேட கூட்டங்கள் நடாத்தப்பட்டன. முதலாவது கூட்டம் 2015 ஏப்பிரல் 14 – 15 ஆம் திகதிகளில் இந்தியாவின் கோவாவில் நடாத்தப்பட்டதுடன் இரண்டாவது SAARC-ADB விசேட கூட்டமானது 2016 ஜனவரி 27 – 28 ஆம் திகதிகளில் மாலைதீவில் இடம்பெற்றது.

2015 ஜூலையில் இங்லாமபாத்தில் கூட்டங்கள் நடைபெற்றதன் பின்னர் எந்தவொரு COE கூட்டங்களும் நடாத்தப்பட்டுருக்கவில்லை என்பதுடன் SAFTA இன் கீழ் எவ்வித அபிவிருத்திகளும் இடம்பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சார்க் பிராந்தியத்தின் இரண்டு பிரதான வர்த்தக பங்காளி நாடுகளாக காணப்படும் இந்திய மற்றும் பாகிஸ்தானுடனான இரண்டு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் வர்த்தகம் பெரும்பாலும் முன்னெடுக்கப்படுவதுடன் SAFTA இன் கீழான இலங்கையின் வர்த்தகம் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றல்ல.

### 5.3 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

முன்னதாக பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்ட ஆசி யபசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது (APTA), ஆசிய மற்றும் பசுபிக்குக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் (UN-ESCAP) ஆரம்பிக்குகையாக 1975 இல் கைச்சாத்திடப்பட்டது. இது ஆசிய பிராந்தியத்திலுள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட மிகவும் பழமை வாய்ந்ததொரு உடன்னபடிக்கையாகும். APTA ஆனது வர்த்தகப் பொருட்கள், சேவைகள், முதலீடு மற்றும் வர்த்தக வசதிப்படுத்தல் என்பவற்றினை உள்ளடக்குவதனூடாக பொருளாதார நல்லிணக்கத்தினை ஏற்படுத்தி பிராந்தியங்களுக்கிடையிலான வர்த்தக விரிவாக்கத்திற்குப் பங்களிப்பினை வழங்குகின்ற பரஸ்பரம் நன்மை பயக்கும் வர்த்தக சுதந்திர நடவடிக்கைகளினூடாக பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது. இலங்கையானது பாங்கொக் உடன்படிக்கை மற்றும் APTA என்பவற்றின் தாபக உறுப்பினர்களில் ஒன்றாகும். உடன்படிக்கையில் தற்போது பங்கு பெறும் நாடுகளாக பங்களாதேஸ், சீனா, இந்தியா, கொரியக் குடியரசு, Lao PDR மற்றும் இலங்கை என்பன உள்ளன. மொங்காலியா APTA இன் 7 ஆவது உறுப்பு நாடதாக விரைவில் வரவுள்ளதுடன் தற்போது பங்குபெறும் நாடுகளுடனான தரிவு வரிச் சலுகைகள் தொடர்பான அதன் பேச்சுவார்த்தைகளின் தலைமைப் பொறுப்பினை நிறைவு செய்துள்ளது.

2018 ஜூலை 1 ஆம் திகதியன்று பயனுறுதியாகும் வகையில் உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட அப்ரா பேச்சுவார்த்தைகளின் நான்காவது சுற்றின் பெறுபேறாக இருக்கின்ற ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் இரண்டாவது திருத்தமானது 33% சராசரி முன்னுரிமை எல்லையுடன் கூடிய 10,312 உற்பத்திப் பொருட்களுக்கான தரிவுக் குறைப்பினை வலிதாக்குகின்றது. அத்துடன், அப்ராவில் பங்குபெறும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாவன சீனா, கொரியக் குடியரசு மற்றும் இலங்கை என்பவற்றுடன் 86% சராசரி முன்னுரிமை எல்லையுடன் 1,259 மற்றும் 1,251 உற்பத்திப் பொருட்களுக்கான முன்னுரிமைசார் தரிவானது குறைவிருத்தி பங்குபெறும் நாடுகளான பங்களாதேஸ் மற்றும் டாவோ பிடிஆர் வரை விரிவாக்கப்பட்டுள்ளது. இலங்கையானது 2018.03.16 ஆம் திகதிய 2062/45 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிவித்தலின் மூலம் அப்ரா பேச்சுவார்த்தைகளின் 4 ஆவது சுற்றில் உடன்பாடு காணப்பட்ட அதன் தரிவுச் சலுகைகளினை அமுலாக்கியுள்ளது.

ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான முதலீடு, வர்த்தக வசதிப்படுத்தல், சேவைகள் மற்றும் மூல விதிகளின் மீதான தொழிற்படு கூட்டங்களுடன் இணைந்த வகையில் நிலையியல் குழுவின் 52 மற்றும் 53 ஆவது அமர்வுகள் முறையே 2018 மார்ச் மற்றும் செப்ரெம்பரில் நடாத்தப்பட்டன. இத்தகைய கூட்டங்களின் போது, தொழிற்படு குழுக்கள் பிரதானமாக தொழிற்படு குழுக்களின் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக குறிப்புக்கள மற்றும் வரையறைகளின் நியதிகளை நிறைவு செய்வதில் ஈடுபட்டு வருகின்றது..

அப்ராவின் கீழான இலங்கையின் ஏற்றுமதிகள் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் முறையே 151.09 மில்லியன் மற்றும் 156.25 மில்லியனாக இருந்துள்ளது. அப்ராவின் கீழான பிரதான ஏற்றுமதி பொருளான தேயிலையானது தெங்கு மற்றும் முனைப்பாக்கப்பட்ட கார்பன் என்பவற்றிற்கு

அடுத்தபடியாக இருந்துள்ளது. 2018 இல் வர்த்தக திணைக்களமானது அப்ராவின் கீழ் 4,297 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்கியுள்ளது. அப்ராவின் கீழான பிரதான வர்த்தக பங்காளிகளாக சீனா, கொரியக் குடியரசு மற்றும் இந்தியா என்பன விளங்குகின்றன.

## 5.4 பூகோள வர்த்தக முன்னுரிமை முறைமை (GSTP)

பூகோள வர்த்தக முன்னுரிமை முறைமையானது (GSTP) அபிவிருத்தியிடைந்து வரும் நாடுகளுக்கிடையில் வர்த்தக வாய்ப்புக்களை விருத்தி செய்யும் பொருட்டு அங்ராட்டினால் ஆரம்பிக்கப்பட்டு 1989 ஏப்பிரல் 19 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது. 2017 இல் கொலம்பியா இதிலிருந்து விலகிச் செல்லு வரையில் 43 GSTP பங்குபெறும் உறுப்பு நாடுகள் இருந்துள்ளன. அல்ஜீரியா, ஆர்ஜென்டீனா, பங்களாதேஸ், பெனின், பொலிவியா, பிரேசில், கமரோன், சிலி, கியூபா, ஈக்குவடார், எகிப்து, மசெடோனியா, கானா, கியூனியா, இந்தியா, இந்தோனேசியா, ஈரான், ஈராக், வட கொரியா, தென் கொரியா, லிபியா, மலேசியா, மெக்ஸிக்கோ, மொசாம்பிக், மியான்மார், நிக்கரகுவா, நைஜீரியா,பாகிஸ்தான், பெரு, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இலங்கை, சூடான், தன்சானியா, தாய்லாந்து, திரிண்டட் மற்றும் ரொப்க்கா, தன்சியா, வெனுசுவெலா, வியடனாம் மற்றும் சிம்பாவே போன்ற நாடுகள் 2010 இல் 11 ட்ரில்லியன் பெறுமதியான உலக மொத்த வர்த்தகத்தில் ஏறக்குறைய 20% இனை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

இதுவரையில், GSTP இல் பங்குபெறும் நாடுகளுக்கிடையில் மூன்று சுற்று வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் இடன்பெற்றுள்ளன. பிரேஸிலின் சாவோ போலோவில் நடாத்தப்பட்ட UNCTAD XI வைபவத்தின் பொது 2004 இல் ஆரம்பிக்கப்பட்ட சாவோ போலோ சுற்றானது ஆறு வருட தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளின் பின்னர் 2010 டிசம்பர் 15 ஆம் திகதியன்று முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் சாவோ போலே சுற்றில் 22 GSTP உறுப்பு நாடுகள் பங்குபற்றியுள்ள போதிலும் அவற்றுள் 11 நாடுகள் மாத்திரம் 2010 இல் இடம்பெற்ற சாவோ போலோவின் மூன்றாவது சுற்றில் இறுதியாக தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கைச்சாத்துடுள்ளன.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், GSTP இன் கீழான இலங்கை ஏற்றுமதிகள் 2017 ஆம் ஆண்டுக்குரிய தொகைகளுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. GSTP இன் கீழான மொத்த ஏற்றுமதிகளில் 95% இனைக் கொண்டுள்ள கறுவா அனது தேயிலை, தெங்கு, கடதாசி அட்டையினாலான பொதியிடல் கொள்கலன்கள் மற்றும் எண்ணெய் கேகுக்கள் என்பவற்றினைத் தொடர்ந்து பிரதான ஏற்றுமதிப் பொருளாக விளங்குகின்றது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது GSTP இன் கீழ் 142 மூலச் சான்றிதழ்கிளனை வழங்கியுள்ளது. GSTP இன் கீழான பிரதான வர்த்தகப் பங்காளி நாடுகளாக மெக்ஸிக்கா மற்றும் பெரு என்பன விளங்குகின்றன.

## 5.5 ஏனைய சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள்

### 5.5.1 பல் துறைசார்ந்த தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்களா விரிகுடா உடன்படிக்கைகள் (BIMSTEC)

பல்துறைசார்ந்த தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா ஆரம்பிக்குகையானது (BIMSTEC) தொடர்ச்சியான பிராந்திய ஒருங்கிணைப்பினை

கொண்டிருக்கும் வங்காள விரிகுடா பிராந்தியத்திலுள்ள அல்லது அண்மையிலுள்ள ஏழு நாடுகளினைக் கொண்டுள்ள பிராந்திய நிறுவனமொன்றாகும். இது பாங்கொக் பிரகடனத்தின் மூலமாக 1997 ஜூன் 6 ஆம் திகதியன்று கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிராந்திய நிறுவனமாக மாற்றமடைந்தது. இது எழு அங்கத்துவ நாடுகளினைக் கொண்டுள்ளதுடன் அவற்றுள் பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, நேபாளம், இலங்கை போன்ற ஐந்து தென்னாசிய நாடுகளினையும் தென் கிழக்கு ஆசியாவிலிருந்து மியான்மார் மற்றும் தாய்லாந்து உள்ளடங்கலான இரண்டு நாடுகளினையுங் கொண்டுள்ளது.

BIMSTEC FTA இன் 21 ஆவது வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவானது, 2018 நவம்பர் 18 – 19 வரையில் பங்களாதேஸின் டாக்கா நகரில் நடாத்தப்பட்டது. பொருட்களின் வர்த்தகம், மூல விதிகளின் வரைபு மற்றும் உற்பத்திப் பொருள் விசேட விதிகள் என்பவை தொடர்பான உடன்படிக்கைகளின் முன்னேற்றம் குறித்து கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. கூட்டத்தில் பொருட்கள்தொடர்பான உடன்படிக்கையினை விரைவாக அமுலாக்குவது குறித்து உடன்பாடு காணப்பட்டது. சுங்க ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கையானது குறித்த கூட்டம் நடாத்தப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற முன்னேற்றங்கள் குறித்த விடயங்களில் ஒன்றாக இருந்துள்ளது. ROO தொடர்பான அடுத்த கூட்டங்களை நடாத்துவதற்கும் கூட்டத்தில் உடன்பாடு காணப்பட்டுள்ளதுடன் BIMSTEC FTA இறுதி வடிவத்தினை விரைவாகப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இடைக்காலக் கூட்டமாக தனித்தனியாக தொழிற்படு குழுக்களுடன் தொடர்புடைய முதலீட்டுக் குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளினை நடாத்தியுள்ளது.

### 5.5.2 இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பு (IORA)

இந்து சமுத்திர கரையோரக் கூட்டமைப்பானது இந்தியப் பிராந்தியத்தினுள் பிராந்திய ஒத்துழைப்பினை வலுவூட்டுவதனையும் நிலையான அபிவிருத்தியினை உறுதி செய்வதனையும் நோக்காகக் கொண்ட அரசாங்க நிறுவனங்களுக்கிடையிலான ஓர் அமைப்பாகும். இதில் (அவுஸ்திரேலியா, பங்களாதேஸ், கொமொரோஸ், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், கொன்யா, மடகஸ்கார், மலேசியா, மொரிஷியஸ், சோமாலியா, மொசாம்பிக், ஓமான், சீசெல்ஸ், சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, இலங்கை, தன்சானியா, தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஜேமன்) ஆகிய 21 நாடுகள் அங்கம் வகிக்கின்றதுடன் 7 பேச்சுவார்த்தைப் பங்காளிகளும் (சீனா, எகிப்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா) உள்ளடங்குகின்றன. தென்னாபிரிக்கா தற்போது இதன் தலைமைப் பொறுப்பினை வகித்து வருகின்றது.

இந்த பிராந்திய மன்றமானது, பிராந்தியத்தில் அரசாங்க, வியாபார மற்றும் கல்வியாளர் பிரதிநிதிகளுக்கிடையில் நெருங்கிய தொடர்பினைக் கொண்டு வருகின்றது. இக்கூட்டமைப்பின் அதிகூடிய அதிகாரமானது, வருடாந்தம் அல்லது அடிக்கடி கூடுகின்ற வெளிநாட்டு அமைச்சர்களின் (COM) பேரவை கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானிக்கப்படும். சிரேஷ்ட அதிகாரிகள் குழுவானது (CSO) உறுப்பு நாடுகளின் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளினைக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையேனும் கூடுகின்றது. அவர்கள் வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழு (WGTI), இந்து சமுத்திர கரையோரவியாபார மன்றம் (IORBF) மற்றும் இந்து சமுத்திர கல்வியாளர் குழு (IORAG) ஆகிய மூன்று தொழிற்படு குழுக்களின் COM மற்றும் நிருவாகப் பிரிவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அமுலாக்கலினை மீளாய்வு செய்கின்றன. பிராந்தியத்தில் நிலையான வளர்ச்சி மற்றும் மீதியாயுள்ள அபிவிருத்தி என்பவற்றினை ஊக்குவிக்கும் பொருட்டு IORA இனால் அடையாளங் காணப்பட்டுள்ள பிராந்திய ஒத்துழைப்புக்காக 8 முன்னுரிமை அல்லது முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் உள்ளன.

அவையாவன, பாதுகாப்பு, வர்த்தக மற்றும் முதலீட்டு வசதிப்படுத்தல், மீன்பிடு முகாமைத்துவம், பேரிடர் முகாமைத்துவம், சுற்றுலா மற்றும் கலாச்சார பரிமாற்றம், கல்வியியல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, நீலப் பொருளாதாரம் மற்றும் பெண்கள் பொருளாதார வலுவூட்டல் என்பனவாகும். குறித்த ஆண்டு காலப்பகுதியில், நீலப் பொருளாதாரத்துடன் தொடர்புடைய நிகழ்வுகள் தொடர்பில் கூடியளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தோனேசியா ஆனது "சமாதானம், நிலையான மற்றும் வளம்மிக்க இந்து சமுத்திரத்திற்கான கடல் வழி ஒத்துழைப்பினை வலுவூட்டுதல்" எனும் தொனிப் பொருளின் கீழ் ஜகார்த்தாவில் 2017 மார்ச் 07 ஆம் திகதியன்று IORA தவைலவர்கள் மாநாட்டினை முதன் முதலில் நடாத்தியது. அந்தத் தலைவர்கள் மாநாட்டில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டார்.அத்துடன், 2017 இல் தென்னாபிரிக்காவின் தர்பன் நகரில் ஒக்டோபர் 14 – 18 வரையில் 17 ஆவது, IORA அமைச்சர்களின் பேரவைக் கூட்டம் நடாத்தப்பட்டதுடன் 4 ஆவது இந்து சமுத்திர பேசுவார்த்தையும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில் ஒக்டோபர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

2018 ஆம் ஆண்டில், IORA புதுப்பிக்கத்தக்க வலு நிபுணர்களின் கூட்டம் மற்றும் 2 ஆவது IORA புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் இந்தியாவின் புதுடில்லியில் ஒக்டோபரில் நடாத்தப்பட்டது. IORA கடல்வழிப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொழிற்படு குழுவினைத் தாபிப்பது தொடர்பான ஆரம்ப செயலமர்வானது இலங்கையில் கொழும்பில் கூடியது. "பெண்களின் பொருளாதார வலுவூட்டல் – நிலையான அபிவிருத்திக்கான ஒரு முன்னேற்பாடு" எனும் தொனிப்பொருளில் IORA அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு மொரிஷியஙில் ஆகஸ்ட் மாதம் நடாத்தப்பட்டது. சிரேஷ்ட அதிகாரிகளின் 8 ஆவது உப வருடாந்த குழுக் கூட்டமானது தர்பானில் ஜூலையில நடாத்தப்பட்டது. நிலக் கார்பன் மீதான மேற்கு அவுஸ்திரேலியாவில் மார்ச்சில் நடாத்தப்பட்டது.

## 6. வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு

### 6.1 வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவம்

வர்த்தக திணைக்களத்தின் வர்த்தகசார் பிரதிநிதித்துவமானது வெளிநாடுகளிலுள்ள 28 தூதரங்களிலுள்ள 30 உத்தியோகத்தர்களினைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் வர்த்தகம் ,முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளில் விசேட கவனம் செலுத்துவதுடன் அனுசரணை நாடுகளில் இலங்கையின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களினை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றனர் .வர்த்தக உத்தியோகத்தர்கள் "அரச – தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் "எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பரந்தளவிலான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் .வர்த்தக திணைக்களமானது வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய வியாபார ஆதரவு நிறவனங்களின் உதவுகையுடன் இலங்கை ஏற்றுமதிகளுக்கான சர்வதேச சந்தை வாய்ப்புக்களை மேலும் விரிவாக்குவதற்கும் பல்வகைப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளினை ஒழுங்கமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றது .வர்த்தக உத்தியோகத்தர்கள் முன்னணி ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான சர்வதேச சந்தை பங்கினை விரிவாக்குவதனூடாக புதிய ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களினை அறிமுகப்படுத்துவதனை பிரதானமாக நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற அதேவேளையில் தற்போதிருக்கும் சந்தைகளில் மிகவும் சுமுகமான

சூழ்நிலையினை உருவாக்குவதிலும் அயராது உழைத்து வருகின்றனர் .அத்துடன் வர்த்தக உத்தியோகத்தர்கள் சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களுக்கான சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்படும் பிரதான தொழிற்பாடுகள் பின்வருவனவற்றினையும் உள்ளடக்குகின்றன.

- இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களினை இனங்காண்பதற்காக சந்தைமதிப்பாய்வுகள் / புலனாய்வுகள் என்பவற்றினை மேற்கொள்ளுதல்

- அனுசரணை வழங்கும் நாட்டின் வர்த்தக கொள்கை மாற்றங்கள், குறிப்பாக, தரிவு மற்றும் தரிவல்லா நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணித்தலும் அறிக்கையிடுதலும்.

- முக்கியமான சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் / நிகழ்வுகளில் இலங்கையின் பங்குபற்றுதலினை ஏற்பாடு செய்தல். இந்தச் செயற்பாடானது, இலங்கையின் ஏற்றுமதிகளினை மேம்படுத்துவதில் மிகவும் வினைத்திறன் வாய்ந்த நடவடிக்கைகளில் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது.

- இலங்கையில் நடாத்தப்படுகின்ற கண்காட்சிகள் / நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு வெளிநாட்டு வர்த்தகத் தூதுக்குழுக்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல்.

- அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கை தொடர்பான ஊக்குவிப்பு (தனியொரு நாடு) நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்

- இலங்கைக்கு விஜயம் செய்வதற்கும் அவ்வாறே வியாபார வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கும் வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த தூதுக்குழுக்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல்.

- வர்த்தகம் சார்ந்த வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கு இலங்கைக்கும் இலங்கையிலிருந்தும் தனிநபர் வியாபார விஜயங்களை ஏற்பாடு செய்தல்

- அனுசரணை வழங்கும் நாட்டிலுள்ள வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய அரசாங்க அதிகாரிகளுடன் வலையமைப்பினைப் பேணுதல் மற்றும் இலங்கையின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களுடன் தொடரபுடைய விடயங்கள் / பிரச்சனைகளுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட அரசாங்க மற்றுமை சர்வதேச நிறுவனங்களில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

- வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய விசாரணைகளினை மேற்கொள்ளுதல், வெளிநாட்டு வியாபாரங்கள் தொடர்பில் கூட்டங்களை நடாத்துதல் / விஜயங்களை மேற்கொள்ளுதல், இலங்கை எற்றுமதியாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவுகையினை வழங்குதல், வர்த்தக பிணக்குகளினைத் தீர்ப்பதற்குத் தேவையான உதவுகையினை வழங்குதல் போன்றவையாகும்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பொழிப்பு அட்டவணை 02 இல் தரப்பட்டுள்ளது. *அட்டவணை02.*

<table>
<tr><th></th><th colspan="2">செயற்பாடு</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td colspan="2">அனுசரணை வழங்கும் நாடுகளில் நடாத்தப்பட்ட விசேட (தனி நாடு) ஊக்குவிப்பு பிரச்சார நடவடிக்கைகள்</td><td>112</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">இலங்கைக்கு வருகை தந்த தூதுக்குழுக்கள்</td><td>தூதுக்குழுக்களின் எண்ணிக்கை</td><td>78</td></tr>
<tr><td>பேராளர்களின் எண்ணிக்கை</td><td>1017</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">அனுசரணை வழங்கும் நாட்டிற்கான தூதுக்குழுக்கள்</td><td>தூதுக்குழுக்களின் எண்ணிக்கை</td><td>167</td></tr>
<tr><td>பேராளர்களின் எண்ணிக்கை</td><td>1680</td></tr>
<tr><td>4</td><td colspan="2">இலங்கைக்கான தனிநபர்களின் விஜயம்</td><td>344</td></tr>
<tr><td>5</td><td colspan="2">அனுசரணை வழங்கும் நாட்டிற்கான தனிநபர்களின் விஜயம்</td><td>397</td></tr>
<tr><td>6</td><td colspan="2">அனுசரணை வழங்கும் நாட்டில் ஊக்குவிக்கப்பட்ட கண்காட்சிகள்</td><td>198</td></tr>
<tr><td rowspan="2">7</td><td rowspan="2">இலங்கையில் அனுசரணை வழங்கும் நாட்டிலிருந்தான ஊக்குவிப்புச் சந்தை பங்குபற்றல்</td><td>சந்தைகளின் எண்ணிக்கை</td><td>49</td></tr>
<tr><td>கண்காட்சியாளர்கள் / வருகைதருநர்களின் எண்ணிக்கை</td><td>460</td></tr>
<tr><td>8</td><td colspan="2">அளிக்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை (வர்த்தகம் /முதலீடு /சுற்றுலா)</td><td>1,948</td></tr>
<tr><td>9</td><td colspan="2">ஆய்வு செய்யப்பட்ட வர்த்தக முறைப்பாடுகளின் எண்ணிக்கை</td><td>138</td></tr>
<tr><td>10</td><td colspan="2">ஊக்குவிக்கப்பட்ட உற்பத்தித் துறைகளின் எண்ணிக்கை</td><td>134</td></tr>
<tr><td>11</td><td colspan="2">வர்த்தக உத்தியோகத்தர்களினால் விஜயம் செய்யப்பட்ட வர்த்தக சந்தைகளின் எண்ணிக்கை</td><td>67</td></tr>
<tr><td>12</td><td colspan="2">அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கையின் வியாபார வலையமைப்புக் கூட்டங்களில் கலந்து கொள்ளல்.</td><td>112</td></tr>
<tr><td>13</td><td colspan="2">சர்வதேச நிறுவனங்கள் / மன்றங்களில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்</td><td>46</td></tr>
<tr><td>14</td><td colspan="2">முதலீட்டு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகள்</td><td>168</td></tr>
<tr><td>15</td><td colspan="2">சந்தைப் புலனாய்வு அறிக்கைகள்</td><td>19</td></tr>
</table>

### 6.1.1 செயல்நிறைவேற்ற மதிப்பீட்டுப் பகுப்பாய்வு

#### 1. ஏற்றுமதி ஊக்குவிப்பு

தூதுக்குழுக்களினால் வலையமைப்புச் செய்யப்பட்ட கீழே குறிப்பிடப்படும் அனுசரணை வழங்கும் காரணிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுத் தரப்பொன்றிடமிருந்தான கட்டளைகளின் மூலமான வெற்றியானது உறதிபடுத்தப்படுள்ளது. எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அத்தகைய காரணிகள் பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகளின் வெளியீட்டினை மட்டுப்படுத்துகின்றன.

| நுண்பாக காரணிகள் | பெரும்பாக காரணிகள் |
|---|---|
| கம்பனியின் பொதுவான ஏற்றுமதி தயார் நிலை /அக்கறை | குறைந்த உற்பத்திச் செலவுடனான போட்டி மிக்க பொருளாதாரம் |
| போட்டி விலை (ஏனைய வழங்குனர் களுடனான போட்டி) | தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மட்டத்திலான முதலீட்டு மட்டம் |
| பொருட்களின் தரம் | மூலவள உதவியளிப்பு நாடு |
| வழங்கல் கொள்திறன் – உரிய நேரத்தில் உரிய முறையில் பாரிய கட்டளையினைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் | வர்த்தக வசதிப்படுத்தல் மட்டம் |
| இறக்குமதி செய்யும் நாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு | செலவின நிதியிடல் கிடைப்பனவு |
| ஊக்குவிப்பு நிதியிடலின் கிடைப்பனவு | |

#### 2. முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு

இந்த வகையில், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுக்குழுவானது தேறிப்பெறுகைக்கான ஆரம்பிக்குகையிலிருந்தான முதலீட்டு மற்றும் சுற்றுலாத் துறை சார்ந்த விசாரணைகளினைக் கையாளவில்லை. இந்த செயல்முறையின் சில முக்கியமான விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தி பரஸ்பரம் நன்மைபயக்கும் தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் பொறுப்பு சம்பந்தப்பட்ட தனியார் துறைகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தூதுக்குழுவின் செயலாற்றுகையானது குறுத்த தூதுக்குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை, முனைப்பு மற்றும் இலக்கு – என்பவை குறித்து மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக அலுவலர்களினால் நிறைவேற்றப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பிரதான வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் கீழே நிரல்படுத்தப்பட்டுள்ளன.;

- இலங்கைத் தேயிலை, வாசனைத்திரவியங்கள், கைப்பணிப் பொருட்கள், கைத்தறி ஆடைகள், ஆயுர்வேத உற்பத்திகள், பீங்கான உற்பத்திப் பொருட்கள் மற்றும் இலங்கையில் கிடைக்கக்கூடிய முதலிட்டு வாய்ப்புக்கள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் என்பன உள்ளடங்கலாக “இலங்கையுடனான வாங்குதலும் முதலீடும்” எனும் தலைப்பின் கீழான நீலக்கல் மற்றும் பெறுமதி மிக்க கற்களினால் ஆக்கப்பட்ட ஆபரணங்கள் என்பவற்றினை ஊக்குவிக்கும் வகையில் இலங்கையின் 70 ஆவது ஆண்டு

சுதந்திர தின கொண்டாட்டத்தினை முன்னிட்டு, சுவிற்சலாந்தின் ஜெனிவா நகரில் 2018 பெப்ரவரி 04 - 09 ஆம் திகதி வரையில் "Facets of Sri Lanka" எனும் தலைப்பில் நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்தது.

- தென்னாபிரிக்கா, பிறெற்ரோறியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயமானது இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் தெங்கு அபிவிருத்திச் சபை என்பவற்றின் ஒத்துழைப்புடன் தென்னாபிரிக்க சர்வதெச வர்த்தக கண்காட்சி 2018 (SAITEX 2018) ஆனது, 2018 ஜுன் 24 – 26 வரையில் மிட்ரான்ட், ஜொநெஸ்பேர்க்கிலுள்ள கலகர் மரபுவழி நிலையத்தில் எமது நாட்டு உற்பத்திப் பொருட்களினை உள்ளடக்கியதாக ஏற்பாடு செய்யப்பட்டது.

- இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையானது (CDA), சிட்னியிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரலுடன் ஒன்றிணைந்து, இலங்கையின் தெங்கு உறுபத்திப் பொருட்களினை ஊக்குவிக்கும் பொருட்டும் அவுஸ்திரேலியாவிலுள்ள வியாபாரப் பங்காளர்கள் மற்றும் வாங்குனர்களுடன் சிறந்த அவுஸ்திரேலிய உணவு கண்காட்சி 2018 இல் பங்குபற்றிய தெங்கு உற்பத்திப் பொருட்களின் எற்றுமதியாளர்களுக்காக மெல்பேர்ணில் 2018 செப்ரெம்பர் 11 ஆம் திகதியன்று வியாபாரக் காலை உணவுக் கூட்டமொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில் 60 இற்கும் மேற்பட்ட பங்காளர்களுக்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன் வர்த்தக, வியாபார மற்றும் முதலீடு குறித்து பல்வேறு கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டுள்ளன.

- இலங்கை வர்த்தக திணைக்களத்தின் ஆதரவுடன் பெஜ்ஜிங்கிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் வர்த்தகப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட 2018 நவம்பர் 5 - 10 வரையில் சங்காயில் நடாத்தப்பட்ட முதலாவது சீன இறக்குமதி எக்ஸ்போவிற்கு அனசரணையாக சீன விவசாய மொத்த சந்தைக் கூட்டமைப்புடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் இலங்கை பழங்கள் மற்றும் மரக்கறிகள் ஏற்றுமதியாளர் சங்கம் மற்றும் இலங்கை கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கம் என்பன கைச்சாத்திட்டன.

- தென்னாபிரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு என்பன ஜோான்ஸ்பேர்க் வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றத்துடன் (JCCI) இணைந்து ஜோன்ஸ்பேர்க் வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றத்தின் (JCCI) கேட்போர் கூடத்தில் 2018 நவம்பர் 16 ஆம் திகதியன்று "இலங்கை தென்னாசிய வியாபார மாநாடொன்றினை" வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. இந்த மாநாடானது 2018 நவம்பர் 13 இலிருந்து 15 வரையில் ஜோன்ஸ்பேர்க்கிலுள்ள கலகர் மாநாட்டு நிலையத்தில் நடாத்தப்பட்ட COMPLAST 2018 இல் பங்குபெறும் இலங்கையின் இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் ஏற்றுமதியாளர்கள் B2B கூட்டங்களுக்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகளினை மேற்கொள்ளும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டது. இது 50 இற்கும் மேற்பட்ட தென்னாபிரிக்க வியாபார அமைப்புக்களினைக் கொண்ட B2B வலையமைப்பினால் முன்னெடுக்கப்பட்டதுடன் இது தொடர்பில் இலங்கைத் தூதுக்குழுவுடன் வெற்றிகரமான கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டன.

- சிட்னி மற்றும் மெல்போர்ணிலுள்ள இலங்கை கொன்சுலேற்றானது இலங்கை தேசிய (NCE) ஏற்றுமதியாளர் மன்றத்துடன் ஒன்றிணைந்து அவுஸ்திரேலிய மெல்பேர்ண் நகரில் நடாத்தப்பட்ட International Sourcing expo இல் பங்குபெறுவதற்கு வர்த்தக தூதுக்குழுவொன்றினை ஏற்பாடு செய்தது. இந்த விஜயமானது அவுஸ்திரேலியாவிலுள்ள

வர்த்தக மன்றங்கள் மற்றும் சங்கங்களுடன் இணைந்து பல்வேறு B2B கூட்டங்களில் பங்குபற்றியதன் விளைவாக ஏற்பட்டதாகும்.

- சவூதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகமானது இலங்கையிலிருந்து இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் பங்குபற்றாளர்கள் இலங்கைத் தேயிலை மற்றும் ஏனைய உணவு உற்பத்திப் பொருட்கள் மற்றும் மென்பான வைகைகள் குறித்து ரியாட்டில் 2018 இடம்பெற்ற சவூதி ஹொரேகா உணவு மற்றும் மென்பானங்கள் கண்காட்சியிலும் ஜெட்டாவில் நவம்பரில் இடம்பெற்ற சவூதி பூடெக்ஸ் கண்காட்சியிலும் வெற்றிகரமாக ஊக்குவிப்பு நடவடிக்கைகளினை முன்னெடுப்பதற்கான உதவுகையினை வழங்கியுள்ளது.

- பிரேசிலிலுள்ள இலங்கைத் தூதரகமானது பரண வர்த்தக சங்கத்தின் உதவுகையுடன் சிறியதொரு கண்காட்சியினை ஏற்பாடு செயதிருந்தது. வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறைக்கான கேந்திர நிலையமாக இலங்கையினை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு 2018 டிசம்பர் முதல் வார கலப்பகுதியில் தேயிலை சுவை பார்க்கும் நிகழ்வு மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளை நடாத்தியுள்ளது.

- பிரான்ஸ், பரிசிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் வர்த்தகப் பிரிவானது இலங்கை ஏற்றுமதிச் சபையுடன் இணைந்து 2018 செப்ரெம்பர் 17 – 20 வரையில் நடாத்தப்பட்ட இரண்டாம் தவணைக்கான "தைத்த ஆடைகளுக்கான கண்காட்சி" இல் இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டது. ஆறு தைத்த ஆடைகளுக்கான ஏற்றுமதியாளர்களும் 2 ஆடை வடிவமைப்பாளர்குளம் பங்குபற்றியிருந்தார்கள். இலங்கையானது பத்திரிகையாளர் சந்திப்பினையும் இலங்கையின் ஆடை அணிவகுப்பினையும் நடாத்தியது. ஒரு சில கம்பனிகள் B2B தொடர்புகளைப் பேணியதுடன் ஒரு சில கம்பனிகள் தமது கட்டளைகளினை நிறைவு செய்தன.

- பொதுநலவாய வர்த்தக மாநாடு 2018 ஆனது பொதுநலவாய அரசாங்க தலைவர்கள் கூட்டம் 2018 (CHOGM 2018) இற்கு இணையாக இலண்டனில் ஏப்பிரல் 16 – 18 வரையில் நடாத்தப்பட்டது. வர்த்தக திணைக்களமானது ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் இலண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் என்பவற்றுடன் இணைந்து IT/BPO, இலத்திரனியல்கள், தைத்த ஆடைகள், கைப்பணிப் பொருட்கள், தெங்கு சுற்றுலாத்துறை, இரத்தினக்கற்களும் ஆபரணங்களும், கடல் போக்குவரத்து மற்றும் படகு கட்டுமானம் , மருத்துவம், கடல வழி வணிகம் மற்றும் உசாவுதல் துறைகள் என்பவற்றினை பிரதிநிதித்துவப்படுத்தும் 40 இஇற்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய்திருந்தது. CBF இற்கான மிகப் பெரிய வியாபாரத் தூதுக்குழுவாக இருக்கின்ற இலங்கை பங்குபற்றாளர்கள் அறிவினைப் பகிர்ந்து கொள்வதில் முக்கியமான பாத்திரத்தினை வகித்திருப்பதுடன் இலங்கைக்கும் ஏனைய உறுப்பு நாடுகளுக்குமிடையில் பொது நலவாய வர்த்தக மற்றும் முதலீட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்கினை வகித்துள்ளனர்.

- கனடாவிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரல் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் ஏனைய உரிய முகவராண்மைகளுடன் ஒருங்கிணைந்து மிகப் பெரிய உணவு மற்றும் மென்பான வர்த்தக கண்காட்சிகளில் ஒன்றான, SIAL கனடா 2018 இல் இலங்கை பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டிருந்தார். இந்த கண்காட்சியின் போது **B2B** கூட்டங்கள் ஏற்பாடு

செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கையின் பங்குபற்றாளர்களுக்கான பயன்மிக்க வர்த்தக தொடர்புகளை தாபிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

வர்த்தக ஊக்குவிப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கு மேலதிகமாக, வர்த்தக உத்தியோகத்தர்கள் இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கான வியாபார வாய்ப்புக்களினைக் கண்டறியும் நோக்குடன் உரிய நாடுகளில் ஒழுங்கு முறையில் நடாத்தப்பட்டு வரும் வர்த்தக சந்தைகளுக்கு விஜயம் செய்துள்ளார்கள்.

## 6.2. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் ஊக்குவிப்பு

வெளிநாட்டிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் (FDI) கொண்டு வருவதில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் வெளிநாடுகளிலுள்ள பிரதான முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவராணமைகளுடன் உறுதியான வலையமைப்புக்களையும் தொடர்புகளையும் ஏற்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், அவர்கள் இலங்கையில் தயாரிப்புக் கைத்தொழிற்சாலைகளின் விரிவாக்கத்திற்கான உள்ளார்ந்த கூட்டு தொழில்முயற்சிப் பங்காளர்களினை இனங்காண்பதற்காக இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் வியாபார தூதுக்குழுக்கள் ஒவ்வொன்றும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அதற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் உள்ளார்ந்த முதலீட்டாளர்களை உரிய சந்தைகளில் சந்தித்து இலங்கையில் கிடைக்கக்கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்துள்ளனர்.

வர்த்தக உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட சில தெரிவு செய்யப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகள்;

- இலங்கைக்கும் கொரியாவுக்குமிடையில் மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பான ஒத்துழைப்பினை வலிதாக்கும் பொருட்டு 2018 ஜனவரி 15 ஆம் திகதியிலிருந்து 19 ஆம் திகதி வரையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த NFFC இன் தலைவரின் தலைமையிலான 10 உறுப்பினர்களினைக் கொண்ட தூதுக்குழுவிற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தென்கொரியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தூதுக்குழுவானது கடல் மற்றும் கரையோர நீரியல் வளம், மீன் பதனிடல் மற்றும் மீன்பிடிப்படகு கைத்தொழிலில் ஒத்துழைப்பினை வலுவூட்டுவது தொடர்பான சாத்தியப்பாடுகளினைக் கண்டறிவது குறித்து கவனம் செலுத்தியுள்ளது.
- சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர் ஸ்தானிகராலயமானது இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவரைச் சந்தித்து அவர்களின் கருத்திட்ட முன்மொழிவுகள் குறித்து கலந்துரையாடுவதற்கு OEG Pharma இன் பணிப்பாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தற்கான வசதிகளிஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அத்துடன் சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர் ஸ்தானிகராலயமானது2018 பெப்ரவரி 24 – 26 வரையில் விசாகபட்டினத்தில் நடாத்தப்பட்ட CII பங்குடமை மாநாட்டில் இலங்கையின் ஐந்து கம்பனிகள் பங்குபற்றுவதற்கான வசதிகளினையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.
- பிரான்ஸிலுள்ள இலங்கைத் தூதரகமானது, இலங்கையில் முதலீடு செய்தற்கு ஆர்வமுடைய 15 இற்கு மேற்பட்ட பிரெஞ்சுக் கம்பனிகளுடன் MEDEF இன்ரநஷனலில் ஏற்பாடு செய்யப்பட்ட முதலீட்டு கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு கௌரவ. நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டது.
- பிரான்ஸிலுள்ள இலங்கைத் தூதரகமானது, இலங்கையில் முதலீடு செய்தற்கு ஆர்வமுடைய 15 இற்கு மேற்பட்ட பிரெஞ்சுக் கம்பனிகளுடன் MEDEF இன்ரநஷனலில் ஏற்பாடு

செய்யப்பட்ட முதலீட்டு கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு கௌரவ. நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டது. அவருடைய விஜயத்தின்போது பல்வேறு இருதரப்புக் கூட்டங்கள் பிரெஞ்சுக் கம்பனிகளுடன் நடாத்தப்பட்டன. இவ்வாறு நடாத்தப்பட்ட கூட்டங்களின் விளைவாக, இலங்கையில் முதலீடு செய்வதற்கான முதலீட்டு முன்மொழிவொன்றினைத் தயாரிப்பதற்கான தகவல்களைச் சேகரிக்கும் பொருட்டு SNCF (பிரெஞ்சு தேசிய புகையிரத கம்பனி) இலிருந்தான தூதுக்குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது.

- ஜப்பானிலுள்ள இலங்கைத் துதரகமானது "சமூக தொழில்முயற்சியாளர்களுக்கான அரங்கம்" இனை தோற்றுவிக்கும் பொருட்டு எம்/எஸ் போர்டர்லெஸ் ஜப்பானுடன் இணைந்து கூட்டமொன்றினை நடாத்தியது. நிறுவனமானது குறுகிய காலப்பகுதியினுள் சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடியவாறான புதிய சமூக வியாபார அமைப்புக்களைத் தோற்றுவிக்க விரும்புகின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு 30 மில்லியன் ஜென்களை முதலீடு செய்வதற்கு உடன்பட்டுக் கொண்டது.

- சிங்கப்பூரில் இலங்கை முதலீட்டாளர் மாநாடானது சிங்கப்பூர் இலங்கை வர்த்தகச் சங்கம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் போர் சீசன்ஸ் ஹோட்டலில் 2018 மார்ச் 1 ஆம் திகதியன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மாண்புமிகு பிரதம மந்திரி தணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்த மாநாட்டில் சிங்கப்பூரினைத் தளமாக கொண்ட 350 இற்கும் மேற்பட்ட கம்பனிகள், முதலீட்டாளர்கள் மற்றும் நிதி முகாமையாளர்கள் என்போர் பங்குபற்றியிருந்ததுடன் சிங்கப்பூரின் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு எஸ்.ஈஸ்வரன் அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார்..

- கனடாவில் இலங்கை கொன்சுலேற் ஜெனரினால் நடாத்தப்பட்ட முதலீட்டாளர்களைக் கவரும் நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுபேறாக கனேடிய கம்பனியிடமிருந்து கிடைக்கப்பெற்ற திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்ட முன்மொழிவு குறித்து தற்போது கலந்துரையாடப்பட்டு வருகின்றது. திண்மக் கழிவுகளை சக்தியாக மாற்றுவதற்கான முன்மொழிவாகும்.

- விசேட நேரடி வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டமான "இலங்கையின் பங்காளி" எனும் நிகழ்சித்திட்டம் நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரலினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஏப்பிரலில் கல்போர்ணியா மற்றும் நெவடா மாநிலங்களில் 4 நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றது. நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் 4 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவொன்று இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளதுடன் போக்குவரத்து, வலு, நீர், கடல் வழிப் பயணம் மற்றும் கடல் வழி சரக்குப் போக்குவரத்து, கழிவு முகாமைத்துவம் போன்ற துறைகளில் முதலீடு செய்ய ஆர்வமுடைய முதலீட்டாளர்களுடன் சந்திப்புக்களையும் மேற்கொண்டுள்ளது.

- ஜேர்மனி, பிராங்போர்டிலுள்ள இலங்கை கொன்சுலேற்றினால் கௌரவ.அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரின் விஜயத்திற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன் ஜேர்மனிய வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றங்கள், ஜேர்மனிய ஆசி ய பசுபிக் வர்த்தகக் கூட்டமைப்பு மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை என்பவற்றின் உதவுகையுடன் 2018 செப்ரெம்பர் 24 – 27 வரையில் பிராங்போர்ட், ஹம்பேர்க் மற்றும் பெர்லின் ஆகிய நகரங்களில் முதலீட்டு ஊக்குவிப்பு விதி நாடகங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த மாநாட்டினை முன்னிட்டு முதலீடு மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு முகவராண்மைகள் மற்றும் தனிப்பட்ட கம்பனிகள் என்பவ்ற்றுடன் பல்வேறு

கூட்ட்டங்களும் எற்பாடு செய்யப்பட்டன. ஒவ்வொரு நகரத்திலும் நடாத்தப்பட்ட இத்தகைய மாநாடுகளில் 100 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர்.

- இலண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தினால் “இலங்கையில் சர்வதேச நிதிசார் நிலையமொன்றினைத் தாபித்தல் – வாய்ப்புக்களும் சவால்களும்” எனும் தலைப்பில் பொதுநலவாய தொழில் முயற்சி மற்றும் முதலீட்டுப் பேரவையினூடாக (CWEIC) வட்ட மேசை மாநாடொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் உலகின் பல்வேறு பாகங்களிலும் சர்வதேச நிதிசார் மையமொன்றினைத் தாபிப்பதில் ஈடுபட்டுள்ள பல்வேறு சட்ட உசாவுலர்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடைய தரப்பினரும் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தின் நோக்கம் கொழும்பு துறைமுக நகரத்தில் தாபிக்கப்படுவுள்ள கொழும்பு சர்வதேச நிதிசார் மையத்தினை (CIFC) ஊக்குவித்தலும் நிபுணர்களிடமிருந்து ஆலோசனைகளினைப் பெறுவதாகவும் அமைந்திருந்தது.

## 6.3. சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு

சுற்றுலாத்துறையில் மறைந்துள்ளவற்றினை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் நோக்குடன் வர்த்தக உத்தியோகத்தர்களினால் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை விமான சேவையானது கண்கவர் சுற்றுலா இடமாக இலங்கையினை ஊக்குப்பதற்கான நடவடிக்கையினையும் மேற்கொண்டுள்ளது. சுற்றுலான இடமாக இலங்கையினை ஊக்குவிப்பதற்கு வர்த்தக உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்படும் பிரதான நடவடிக்கைகளில் மாநாடுகள், விசேட கருத்தரங்குகள், உபாயங்கள் மற்றும் சுற்றுலான குழுக்களை ஏற்பாடு செய்தல், சுற்றுலாக ஊக்குவிப்புக்கு இணை அனுசரணை வழங்குதல், ஊடக தூதுக்குழுக்களை மற்றும் FAM பயண ஒழுங்க்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அனுசரணை வழங்கும் நாட்டிலுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக விளம்பரங்களை மேற்கொள்ளுதல் என்பனவும் உள்ளடங்குகின்றன.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களினால் இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம், இலங்கை சமவாயப் பணியகம் மற்றும் இலங்கையினை சுற்றுலா கேந்திர நிலையமாக மேம்படுத்துவதற்கான பொறுப்பு வாய்ந்த ஏனைய நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த பிரதான நிகழ்வுகளில் சில கீழே தரப்படுகின்றன;

- உலக பிரயாண சந்தை (WTM) 2018, பிரயாண மற்றும் சுற்றுலாத்துறையின் முன்னணி உலகளாவிய நிகழ்வு, 35000 இற்கும் மேற்பட்ட வருகையாளர்களைக் கவருதல், 5000 கண்காட்சியாளர்கள் மற்றும் வருடாந்தம் 2000 இற்கும் மேற்பட்ட பிரயாண முகலர்கள் மற்றும் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் வருடாந்தம் உலகளாவிய முன்னணி பிரயாண ஊடகம் என்பவற்றினை முன்னிட்டு இலண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் 2018 நவம்பர் 05 ஆம் திகதியன்று So Sri Lanka’ உரித்துடைய அதன் புதிய பிராந்திய குறியீட்டினை அடையாளங் காணுவதனை ஆரம்பிப்பதில் இலங்கை சுற்றுலாத்துறைக்கு தேவையான வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இது இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் வனசீவராசிகள் அமைச்சர் மற்றும் மேலும் பல முக்கியஸ்தர்களின் முன்னிலையில் இது ஆரம்பிக்கப்பட்டது. இலண்டன் எக்ஸெல் கண்காட்சி நிலையத்தில் 2018 நவம்பர் 5 – 7 வரையில் நடாத்தப்பட்ட WTM இல் இலங்கை மற்றும ஏனைய நாடுகளிலிருந்து 60 இற்கும் மேற்பட்ட கைத்தொழில் பங்காளர்கள் கலந்து கொண்டார்கள்.

- ரோமிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் (SLTPB), இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு , இலங்கை உள்நாட்டு அலுவல்கள் மற்றும் வடமேல்அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மற்றும்

இலங்கையிலுள்ள ஹேலிஸ் கம்பனிகள் குழுமத்தின் அமயா ஹில்ஸ் ஹோட்டல் என்பவற்றுடன் ஒன்றிணைந்து பெப்ரவரி 9 – 15 வரையிலான காலப்பகுதியினை இலங்கையின் உணவு வாரமென பிரகடனப்படுத்தி அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது.

- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது(SLTPB) சவூதி அரேபியாவின் ஜெத்தாவிலுள்ள இலங்கை கொன்சுலேற் நாயகம் மற்றும் ரியாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் 2018 பெப்ரவரி மற்றும் ஏப்பிரலில் சவூதி அரேபியாவின் பிரதான நகரங்களான ஜெத்தா, ரியாட் மற்றும் தமாம் ஆகியவற்றில் இலங்கையின் சுற்றுலா ஊக்குவிப்பு வீதி நாடகங்கினை நடாத்தியுள்ளது.

- சிட்னியிலுள்ள இலங்கைக்கான கொன்சுலேற் நாயகத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது (SLTPB), டார்லிங் துறைமுகத்தில் 2018 ஆகஸ்ட் 21 – 22 வரையில் நடாத்தப்பட்ட பிரயாணத் துறைக்கான கண்காட்சியில் இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டது. கண்காட்சியின் முதலாம் நாளன்று இலங்கையின் காலை உணவு நிறைவு பெற்றதும் பத்திரிகையாளர் சந்திப்பொன்று டொக்ஸைட் கோல்ட் ரூமில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 40 இற்கும் மேற்பட்ட ஊடகத்துறையினர் மற்றும் பிரயாண ஏற்பாட்டாளர்கள் ஆகியோர் இந்த வலையமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

- இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகத்தின் ஒத்துழைப்புடன் உலக வர்த்தக நிறுவனத்திற்கான தூதுக்குழுவானது, சுவிற்சலாந்தின் லுகானோ கண்காட்சி நிலையத்தில் 2018 நவம்பர் 01 – 04 வரையில் நடாத்தப்பட்ட சுவிஸ் சர்வதேச விடுமுறை நாள் கண்காட்சியில் இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது.

- ரஷியத் தூதரகமானது ஆவணப்படங்களை தயாரிப்பதற்காக இலங்கைக்கு வருகை தருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் இலங்கையில் ஆவணப் படங்களின் வீடியோக்களுக்காக ரஷியாவில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த தொகைகாட்சி அலைவரிசையாக இருக்கின்ற Tour to Kalturi (Culture) இன் ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு வருகை தருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

- MICE 2018 “Meet in Sri Lanka “-MICE பயண இலக்கு என்றவகையில், இலங்கை தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு பிரயாணங்களும் சுற்றுலாக்களும் மற்றும் தனியார் துறை நிறுவனங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் 2018 ஒக்டோபர் 16 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வினை சிங்கப்பூரிலுள்ள இலங்கைத் தூதரகமானது இலங்கை மரபுவழிமுறைப் பணியகத்துடன் (SLCB) ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

- ஸ்ரொக்ஹொல்மிலுள்ள இலங்கை தூதரகமானது ஏரோபுளட் ரஷியன் விமானச் சேவை மற்றும் பசுபிக் ஆசிய பிரயாணக் கூட்டமைப்புடன் (PATA), சுவீடன் சப்ரர் என்பவற்றின் ஒத்துழைப்புடன் சுவீடனிலுள்ள ட்ரவல் கம்பனிகளுக்கான “A Sri Lanka Evening” எனும் பெயரில் நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வின் நோக்கமானது, இலங்கையின் சுற்றுலாத்துறை தொடர்பான தகவல்களை அவர்களுக்கு வழங்குவதன் மூலம், சுவீடன் நாட்டு பிரயாண முகவர்களுக்கு பிரயாண கேந்திர நிலையம் என்வகையில் இலங்கைக்கு வாய்ப்பினை வழங்குவதுடன் அவ்வாறே ஏரோபுளட் ரஷிய எயார்லைன்ஸினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கைக்கான விமான சேவைகளுக்கான தகவல்களை வழங்குவதேயாகும்.

## 6.4. வர்த்தகத் திரைணக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட சில வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

### 6.4.1 Biofach 2018 இல் இலங்கையின் பங்கேற்பு

வர்த்தக திணைக்களமானது நியூரெம்பெர்க்கில் பெப்ரவரி 15 – 18 வரையில் நடாத்தப்பட்ட **Biofach 2018** இல் பிராங்பர்டிலுள்ள இலங்கை கொன்சுலேற்றின் வர்த்தகப் பிரிவுடன் இணைந்து எமது நாட்டின் வர்த்தக கூடாரமொன்றினை ஏற்பாடு செய்ருந்தது. Biofach ஆனது சேதன உணவு மற்றும் பானங்களுக்கான முன்னணி வர்த்தக சந்தையாகும். இந்த வருடத்திற்கான வர்த்தக சந்தையில் மொத்தமாக 2,962 கண்காட்சியாளர்கள் பல்வேறு வகையான உணவு உற்பத்திப் பொருட்களுடன் பங்குபற்றியிருந்தார்கள். இது இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு உலகளாவிய ரீதியில் முன்னணி இறக்குமதியாளர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கு மிகச் சிறந்தொரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. இந்த

வர்த்தக சந்தையில் 25 இலங்கை ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள். வர்த்தக திணைக்களம் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு என்பவற்றினால் அனுசரணை வழங்கப்பட்ட இலங்கையின் வர்த்தக கண்காட்சியில் ஆறு கம்பனிகள் வெற்றிகரமாக பங்குபற்றியிருந்தன. இந்த வர்த்தகச் சந்தையின் பின்னர் இத்தகைய கம்பனிகளினால் பெருமளவிலான ஏற்றுமதிக் கட்டளைகள் பெறப்பட்டன.

### 6.4.2 பெல்ஜியம் படகுக் கண்காட்சிக்கான இலங்கைத் தூதுக்குழுவின் விஜயம்.

பெல்ஜியம் படகுக் கண்காட்சியானது பெல்ஜியத்திலுள்ள படகுத்துறையின் மிகப் பெரிய வர்த்தக சந்தையாகும். இது நீர் விளையாட்டு, நீர்ப் பொழுதுபோக்கு மற்றும் உண்மையான சுப்பர் பாய்மரக்கப்பல் மற்றும் துணைப்பொருட்களின் சமதளமற்ற படகுகளின் மூலமாக மேற்கொள்ளப்படும் நீர்ச் சுற்றுலா என்பனவற்றினையும் உள்ளடக்குகின்றது. வர்த்தக திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கைத் தூதுக்குழுவானது 2018 பெப்ரவரி 10 – 12 மற்றும் 16 – 18 வரையில் ஜென்றில் நடாத்தப்பட்ட படகுக் கண்காட்சியில் கலந்து கொண்டது. இந்த விஜயத்தினை முன்னிட்டு பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தின் வர்த்தகப் பிரிவானது பெல்ஜியத்தின் படகுத்துறையினைச் சார்ந்த பிரதிநிதிகளுடன் ஆக்கபூர்வமான சந்திப்புக்களை ஏற்பாடு செயதிருந்தது. பெல்ஜிய படகு கண்காட்சியின் தலைமை ஏற்பாட்டாளர் அடுத்த பெல்ஜிய படகுக் கண்காட்சிக்கு இலங்கையினை சிறப்பு விருந்தினர் நாடாக கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளதுடன் பெல்ஜிய படகுக் கம்பனிகள் இலங்கைப் படகுக் கம்பனிகளுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணுவதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளன.

### 6.4.3 ஜெனேவா மற்றும் மிலானுக்கான வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு

வர்த்தக திணைக்களமானது (DOC), ரோமிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து இலங்கையின் முன்னோடிப் படகுத் தயாரிப்பாளர்களின் பிரதிநிதிகளினைக் கொண்ட குழுவொன்று 2018 செப்ரெம்பர் 22 – 26 ஆம் திகதி வரையில் ஜெனேவா மற்றும் மிலானுக்கான வர்த்க ஊக்குவிப்பு விஜயமொன்றினை மேற்கொண்டது. இந்த ஊக்குவிப்பு விஜயத்தின் போது இலங்கைத் தூதுக்குழுவானது "ஜெனோவா சர்வதேச படகுக் கண்காட்சி 2018" இல் கலந்து கொண்டது. ஜெனோவா சர்வதேச படகுக் கண்காட்சி ஆனது ஐரோப்பிய பிராந்தியத்தில் இடம்பெற்ற மிகப்பெரிய படகுக் கண்காட்சிகளில் ஒன்றாகும். இக் கண்காட்சியில் அனைத்து வகையான படகுத் தயாரிப்புக்கள், பாய்மரக் கப்பல்கள், ஓய்வுக் கலங்கள் மற்றும் படகுத் தயாரிப்புத் துணைப் பொருட்கள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டன. இலங்கைத் தூதுக்குழுவானது இத்தாலியிலுள்ள முன்னணி படகுத் தயாரிப்பாளர்களுடனும் சந்திப்பினை மேற்கொண்டது. இந்த விஜயமானது இத்தாலிய படகுத் தயாரிப்பாளர்கள் இலங்கையின் படகு

கட்டுமானம் மற்றும் அது தொடர்பான தயாரிப்புக் கைத்தொழில்கள் குறித்தும் அறிந்து கொள்வதற்கான மிகச் சிறந்த சந்தர்ப்பமொன்றினை வழங்கியுள்ளதுடன் இந்தத் துறை தொடர்பில் இரண்டு தரப்புக்களும் தமது அறிவுகளையும் தொழில்நுட்பங்களையும் பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்பினையும் வழங்கியுள்ளது

## 6.5 வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை விசாரணைகளினை வழங்குதல்

வர்த்தக திணைக்களமும் வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கம்பனிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் வர்த்தக விசாரணைகளினைக் கையாளுவதில் மிகவும் முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றனர். வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் அவர்களுக்குரிய தூதரகங்களினாலும் தபால் மூலமாகவும் கிடைக்கப் பெறும் வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை விசாரணைகளினைக் கையாளுகின்றனர்.

மீளாய்வுக் காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் ஏறக்குறைய அத்தகைய 1948 விசாரணைகளினைப் பெற்றுள்ளதுடன் இலங்கையானது முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையில் கேந்திர நிலையமாக இருப்பதால் இவை அனைத்தும் வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் பொருட்டு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கியதன் மூலம் முறையாக மேற்கொள்ளப்பட்டன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு வாங்குனர்களிடமிருந்து வர்த்தக உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய விசாரணைகள் வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றங்கள், வர்த்தக சங்கங்கள், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் உடனடி நடவடிக்கைகளுக்காக உரிய இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த திணைக்களம் மற்றும் ஏனைய வர்த்தகம் தொடர்பான முகவராண்மைகளினால் பெறப்படும் விசாரணைகள் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியொகத்தர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

## 6. 6. வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கான உதவுகை

வர்த்தகம் சார்ந்த பிணக்குகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர் களுக்குமிடையில் சுமுகமான தீர்வொன்றினைக் காணும் நோக்குடன் வர்த்தக திணைக்களத்தினால் சமரசம் செய்து வைக்கப்படுகின்றன. எடுக்கப்பட்ட நடவடிக்கையானது பாரபட்சமின்றியும் சுமுகமான தீர்வினைக் காணப்பதனை நோக்கமாகக் கொண்டும் பரஸ்பரம் பேச்சவார்த்தைகளினூடாக தீர்வுகள் காணப்பட்டன.

மீளாய்வு காலப்பகுதியில், வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் அத்தகைய 137 முறைப்பாடுகள் கையாளப்பட்டுள்ளன

## 6.7 இலங்கையின் விசேட ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள்

உலகளாவிய ரீதியில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களைப் பிரபல்யப்படுத்தி வெளிநாட்டு வாங்குனர்களைக் கவரும் நோக்குடன், வெளிநாட்டுத் தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் அவர்கள் பணிபுரியும் நாடுகளில் இலங்கை குறித்த பல்வேறு விசேட நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளனர். 20418 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கை குறித்த 112 விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## 6.8 வதிவிட விசாக்களுக்கான பரிந்துரை

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களமானது வதிவிட விசாக்களினை வழங்குவதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர், அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் இலங்கைக்கு வரகை தந்து வியாபார முயற்சிகளில் ஈடுபடுகின்ற வெளிநாட்டுக் கம்பனிகளுக்கான வதிவிட விசாக்களினை வழங்கும் பொருட்டு வரிசை அமைச்சுக்களின் பரிந்துரைகளினைக் கோருகின்றார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு, வர்த்தக திணைக்களமானது தகுதிவாய்ந்த பலம்பெயர்ந்தவர்கள், உசாவுலர்கள், நிபுணர்கள் மற்றும் இணைப்பு அலுவலகங்களில் பணியாற்றும் அவர்களின் தங்கியிருப்போர், கிளை அலுவலகங்கள் அல்லது வெளிநாட்டுக் கம்பனிகள், ஏனைய வர்த்தக மற்றும் வியாபார தொழில் முயற்சிகளுக்கான பரிந்துரைக் கடிதங்களை அத்தகைய ஏற்றுமதி வர்த்தகத்திற்கான தொழில்வாய்ப்புக்கள், தொழில்நுட்ப மாற்றுகை மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கான உற்பத்தி மேம்பாடு போன்றவற்றிற்குக் கிடைக்கக்கூடிய நேரடிப் பயன்களினைக் கருத்தில் கொண்டு வழங்குகின்றது.

2018 ஆம் ஆண்டில், 27 தேசிய இனங்களிலிருந்தான 146 விண்ணப்பதாரிகள் மற்றும் அவர்களின் 114 தங்கியிருப்போருக்கு ஒரு வருட காலப்பகுதிக்கான நுழைவு மற்றும் வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைக் கடிதங்களினை வழங்கியுள்ளது.

## 6.9 கடன் முகவராண்மைகளின் அங்கீகாரம்

1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க அடைமானச் சட்டத்தின் கீழ் ஏதேனும் கம்பனி ,நிறுவனம் அல்லது தனிநபரினை அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவராண்மையாக பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரமானது வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது .பணிப்பாளர் நாயகமானவர் 1949ஆம் ஆண்டின் 6ஆம் இல .குத்தகை சட்டத்தின் (1)114ஆம் பிரிவின் கீழ் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இரண்டு ஏனைய உறுப்பினர்களைக் கொண்ட சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

2018 மீளாய்வு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது 04 விண்ணப்பங்களினை பெற்றுள்ளதுடன் இவற்றுள் சபையின் பரிந்துரையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவராண்மை நிறுவனம் என்ற தகுதி நிலையானது ஒரு கம்பனிக்கு மட்டும் வழங்கப்பட்டது.

## 6.10 ஐரோப்பிய ஒன்றியம் நிதியிட்ட வர்த்தகத்துடன் தொடர்புடைய திறன் கட்டியெழுப்பும் கருத்திட்டங்கள்

“ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை வர்த்தகம் தொடர்பான உதவுகை: பிராந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளில் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளினை அதிகரித்தல்” கருத்திட்டமானது 18 ஆவது ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை கூட்டு ஆணைக்குழுவிற்கு சமாந்தரமாக புறுசல்ஸில் 2013 டிசம்பர் 02 ஆம் திகதி நடாத்தப்பட்ட வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மீதான ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை தொழிற்படு குழுவிற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியமானது இக்கருத்திட்டத்திற்காக 8மில்லியன் யூரோக்களை நிதியிடுவதற்கு உடன்பட்டுக் கொண்டுள்ளதுடன் சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் UNIDO என்பன இக்கருத்திட்டதினை அமுல்படுத்தும் முகவராண்மையாக செயற்படும் அதேவேளையில் , இக்கருத்திட்டத்தின் தேசிய இணைப்பாளராக வர்த்தகத் திணைக்களம் விளங்குகின்றது.

கருத்திட்டத்தின் முற்றுமுழுதான நோக்கம் ,வர்த்தக நோக்கிலான வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒருங்கிணைவு உள்ளடங்கலான இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பினை வழங்குவதன் மூலம் ,வறுமை ஒழிப்புக்குப் பங்களிப்பினை வழங்குவதேயாகும்.

அதற்கிணங்க, பின்வரும் நான்கு பிரதான விடயங்களில் கருத்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன:

1. ER 1. உலக வர்த்தக நிறுவனம், பிராந்திய ஒருங்கிணைவு செயல்முறை மற்றும் ஐ.ஒ.இன் பொதுவான முன்னுரிமைத் திட்டம் (GSP+) என்பவற்றினால் வடிவமைக்கப்பட்டவாறு கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மறுசீரமைப்புக்கள் மற்றும் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் உள்ளடங்கலாக, ஏற்றுமதி போட்டித்தன்மைக்காக தெளிவான வர்த்தக உபாயத்தினை வடிவமைத்தல் மற்றும் அமுலாக்குதல்

2. ER 2. விரிவாக்கப்பட்ட குறுக்கு எல்லை வினைத்திறன் நடைமுறைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் (SMEs) வினைத்திறனை பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய கூட்டமைப்பு(SAARC) மற்றும் ஐ.ஒ.சந்தைகள் போன்றவற்றிற்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற வகையில் விரிவாக்குதல்.

3. ER 3. பிராந்திய மற்றும் ஐ.ஒ.சந்தைகளில் தரமான நியமங்கள் மற்றும் சுகாதார மற்றும் சுகாதார நலன் பேணல் சேவை (SPS) நடவடிக்கைகளில் தரத்தினைப் பேணும் பொருட்டு உள்ளக கட்டமைப்பு வசதிகளின் தரம் மற்றும் இணக்கப்பாடு என்பவற்றினை மேம்படுத்துதல்.

4. ER 4. ஏற்றுமதி நோக்கிலான துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் போட்டித்தன்மை அதிகரித்தமை. (வாசனைத் திரவியங்கள், உணவு மற்றும் த.தொ./BPO கைத்தொழில்).

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், வர்த்தகத் திணைக்களத்துடன் கூட்டுச் சேர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் – இலங்கை கருத்திட்ட உதவுகையுடன் தொடர்புடையதன் கீழ் ITC இனால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான தொழில்நுட்ப உதவுகை நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு:

1. 2018 ஒக்டோபரில் அரசாங்க முகவராண்மைகள் மற்றும் கப்பல்துறை முகவராண்மைகளிலிருந்தான பங்குபற்றாளர்களுக்காக நிதி அமைச்சுடன் ஒன்றிணைந்து கப்பல் போக்குவரத்து மற்றும் கடல்வழிப் பயணங்கள் மற்றும் போக்குவரத்து மறுசீரமைப்பு என்பவை தொடர்பில் வட்ட மேசை கலந்துரையாடல் மற்றும் அரச தனியார் பேச்சுவார்த்தைகள்.

2. அரசாங்க முகவராண்மைகள், கைத்தொழில் நிறுவனங்கள், பல்கலைக்கழக நிறுவனங்கள், வர்த்தக மன்றங்கள் போன்றவற்றிற்காக 2018 மார்ச்சில் நடாத்தப்பட்ட “Making the Digital Marketplace Fairer” PPD இற்கான இ- வர்த்தக ஏற்பாடுகளும் பரிந்துரைகளும்.

3. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மீதான பயிற்சிகள்: பொருளியல் மற்றும் வர்த்தக எடுத்துரைப்புக்கள் (பகுதி II மற்றும் பயிற்சிகள்) மீதான தொழில்நுட்ப திறன் கட்டியெழுப்புதல் மற்றும் "போக்குகளும் நடைமுறைச் செயற்பாடுகளும்".

4. 2018 மார்ச்சில் வர்த்தக நிவாரணங்களின் (ACWL உடன் ஏற்பாடு செய்யப்பட்டது) "உள்ளடக்கம் மற்றும் நடைமுறை" மீதான இலங்கையின் 34 அரசாங்க மற்றும் தனியார் துறைப் பிரதிநிதிகளுக்கான வீடியோ மூலமான பயிற்சி

5. 2018 ஜூனில் அரசாங்க முகவராண்மைகள், வர்த்தக மன்றங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பவற்றிற்கான முதலீட்டு பேச்சுவார்த்தைகள் மற்றும் பிணக்குத் தீர்வு தொடர்பான பயிற்சி

6. 2018 செப்ரெம்பரில் இலங்கையின் ஏற்றுமதிக் கம்பனிகளுக்கான உலக வர்த்தக நிறுவன சுகாதார மற்றும் தாவரங்கள் சார்ந்த சுகாதார (SPS) உடன்படிக்கை சட்ட ரீதியான உகந்த தன்மை

7. 2018 செப்ரெம்பரில் வர்த்தக கொள்கையில் முதுமாணிப் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்காக Harvard Kennedy School Executive Course இல் வர்த்தக திணைக்களம் மற்றும் ஏனைய அரசாங்க முகவராண்மைகளிலிருந்தான சிரேஷ்ட அதிகாரிகளின் பங்குபற்றுதல்.

8. 2018 ஒக்டோபரில் அரசாங்க மற்றும் தனியார் துறைகளுக்கான வர்த்தக நிவாரணம் தொடர்பான அறிமுகப் பயிற்சி

9. தேசிய ஒற்றைப் பலகணி (NSW) மீதான 4 அரசாங்க தனியார் பேச்சுவார்த்தைகள் (PPD) – NTFC உறுப்பு முகவராண்மைகள் மற்றும் தனியார் தரப்புக்களுடன் 2018 செப்ரெம்பரில் அமுலாக்கல் பிரச்சனைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் மீதான 4 ஆவது அரச மற்றும் தனியார் துறை பேச்சுவார்த்தைகள், ஜூலையில் NSW இற்கான தொழிற்பாட்டு மாதிரிகள் மீதான 3 ஆவது அரச மற்றும் தனியார் துறையின் 3 ஆவது பேச்சுவார்த்தை மற்றும் மே இல் NSW இன் ஆட்சி முறைமை மீதான 2 ஆவது அரச மற்றும் தனியார் துறையின் பேச்சுவார்த்தை மற்றும் NSW இன் தொழிற்பாட்டு நோக்கெல்லை மீதான 1 ஆவது அரச மற்றும் தனியார் துறையின் பேச்சுவார்த்தை

10. 2018 ஆகஸ்ட் மற்றும் செப்ரெம்பரில் அவுஸ்திரேலியாவுக்கு தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவின் உறுப்பினர்களுக்கான திறன் விருத்தி ஆய்வு சுற்றுலாவினை ஏற்பாடு செய்தல்.

11. வர்த்தக திணைக்களம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் SLASSCOM என்பவற்றிலிருந்தான 9 பங்குபற்றாளர்கள் 5 தேசிய ஏற்றுமதி சந்தைப்படுத்தல் திட்டமிடல் பயிற்சியாளர்களுக்கு 2018 மார்ச்சில் ஏற்றுமதி சந்தைப்படுத்தல் திட்டமிடல் தொடர்பில் பயிற்சியளிக்கப்பட்டது.

12. தேசிய ஏற்றுமதி சந்தைப்படுத்தல் திட்டமிடலின் (EMP) 5 பயிற்சியாளர்கள் மற்றும் வர்த்தக திணைக்களம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் SLASSCOM ஆகியவற்றிலிருந்தான 9 பங்குபற்றாளர்கள் ஆகியோருக்கு 2018 மார்ச்சில் தேசிய ஏற்றுமதி சந்தைப்படுத்தல் திட்டமிடல் (EMP) பயிற்சி முறைமைகள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.

13. 3 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் 4 வர்த்தக சந்தைகள் / B2B நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு 15 பயனாளி கம்பனிகளுக்கு நிதியளிக்கப்பட்டது. (2017 நவம்பரில் 4 வியாபாரக் கூட்டங்கள் லண்டனில் நடாத்தப்பட்டன; 2018 பெப்ரவரியில் Barcelona, MWC இல் 4; 2018 ஜூனில் CEBIT Hannover இல் 10, 2018 ஜூனில் SheTrades, Liverpool இல் 3)

14. 2018 டிசம்பரில் வர்த்தக திணைக்களத்தின் வர்த்தக நிவாரணப் பிரிவுக்கு இணைகைகப்பட்ட அலுவலர்களுக்கான வர்த்தக நிவாரணம் தொடர்பான பயிற்சி அமர்வு

15. 2018 டிசம்பரில் வர்த்தக திணைக்களத்தில் வர்த்தக தகவல் இணையத்தள குழுவிற்கான தொழிற்பாடு சார்ந்த அபிவிருத்தி செயலமர்வு.

## 7. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகை

வர்த்தக திணைக்களமானது பின்வரும் முன்னுரிமைத் திட்டங்கள் மற்றும் பிராந்திய இருதரப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான உற்பத்தி நாட்டு சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.

- ✓ முன்னுரிமையின் பொதுவான முறைமை (GSP)
- ✓ வர்த்தக முன்னுரிமையின் பூகோள முறைமை (GSTP)
- ✓ சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)
- ✓ தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- ✓ இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((ISFTA)
- ✓ பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((PSFTA)
- ✓ ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

வேலை நாளொன்றில் சராசரியாக வர்த்தக திணைக்களத்தினால் 300 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் செயல்முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. உயர்தரத்தில் பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினைக் கொண்ட குழுவொன்று உற்பத்தி நாட்டுச்சான்றிதழ் வழங்கும் பிரிவில் முழுநேரமும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முன் அனுமதியின்றி அலுவலக நேரங்களில் உசாவுதல்களும் மேலதிக விளக்கங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. உயர் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர்களினால் தினசரி சராசரியாக 30 முதல் 50 வரையிலான உசாவுதவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையானது வேறுபட்ட உடன்படிக்கைகள்/ஏற்பாடுகளின் கீழான உரிய மூல விதிகளின் வகையீடுகளில் ஆழமான அறிவுடன் விசேடமாக வடிவமைக்கப்பட்டு உயர் தரத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் வர்த்தக திணைக்களம் பின்வருவனவற்றிற்கு பொறுப்பு வகிக்கின்றது;

(அ) வரிச்சலுகைகளுக்கான பொருட்களின் தகமையினை மதிப்பீடு செய்தல்

(ஆ) ஏற்றுமதியாளர்களின் விபரங்களைப் பதிவு செய்தலும் பேணுதலும்,

(இ) தமது தகமையினை நிரூபிப்பதற்காக ஏற்றுமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் செலவுக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய இணை ஆவணங்களை மதிப்பீடு செய்தல்,

(ஈ) முன்னுரிமை வழங்கும் நாடுகளின் கோரிக்கையின் பேரில் உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையின் பின்னரான கணக்காய்வினை நடாத்துதல் மற்றும்

(உ) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கைகளினை தொகுத்தலும்.

கடந்த 3 ஆண்டுகளில் வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் விபரம் கீழே தரப்படுகின்றது.

**வர்த்தக திணைக்கள்தினல் வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் - (2016- 2018)**

| | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|
| **உடன்படிக்கைகள்** | **வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை** | **மொத்த ஏற்றுமதிப் பெறுமதி மில்லியன் அ.டொலர்** | **வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை** | **மொத்த ஏற்றுமதிப் பெறுமதி மில்லியன் அ.டொலர்** | **வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை** | **மொத்த ஏற்றுமதிப் பெறுமதி மில்லியன் அ.டொலர்** |
| EU GSP | 74,003 | 2,243.51 | 80,867 | 2473.91 | 43,680 | 2665.28 |
| GSP ஏனைய நாடுகள் | 12,495 | 1,150.22 | 12,468 | 1429.47 | 10,884 | 1262.42 |
| ISFTA | 12,621 | 375.16 | 12,864 | 442.29 | 12,882 | 481.00 |
| PSFTA | 6,673 | 51.52 | 6,703 | 60.33 | 5,265 | 51.00 |
| APTA | 4,508 | 125.6 | 6,038 | 150.8 | 4,290 | 156.98 |
| SAFTA | 149 | 6.89 | 679 | 41.07 | 557 | 35.42 |
| SAPTA | 288 | 3.4 | 277 | 4.49 | 239 | 3.54 |
| GSTP | 143 | 45.14 | 100 | 81.2 | 143 | 92.58 |
| **மொத்தம்** | **110,830** | **4,001.44** | **120,277** | **4,683.56** | **77,940** | **4748.22** |

*மூலம்: வர்த்தக திணைக்களம்*

## 8. வருடாந்தக் கணக்குகள் 2018

தலைப்பு இல.: 295

அமைச்சு / திணைக்களம்:- வர்த்தக திணைக்களம்

நிகழ்ச்சித்திட்ட இல.: 01

கருத்திட்ட இல.: 01

மீண்டுவரும் செலவினம்

| விபரணம் | 2017<br>உண்மை<br>ரூபா. 000 | 2018<br>மதிப்பீடு<br>ரூபா. 000 | 2018<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>ரூபா. 000 | 2018<br>உண்மைச் செலவினம்.<br>ரூபா. 000 | 2018<br>சேமிப்புக்கள்<br>ரூபா. 000 |
|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 51,357 | 55,400 | 57,980 | 56,249 | 1,731 |
| ஏனையவை | 64,408 | 73,150 | 78,870 | 75,576 | 3,294 |
| மொத்தம் | **115,765** | **128,550** | **136,850** | **131,825** | **5,025** |

## மூலதனச் செலவினம்

| செலவின விபரணம் | 2017<br>உண்மை<br>ரூபா. 000 | 2018<br>மதிப்பீடு<br>ரூபா. 000 | 2018<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>ரூபா. 000 | 2018<br>உண்மைச் செலவினம்.<br>ரூபா. 000 | 2018<br>சேமிப்புக்கள்<br>ரூபா. 000 |
|---|---|---|---|---|---|
| **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | **2,119** | **300** | **300** | **272** | **28** |
| கட்டிடங்களும் பொருத்துக்களும் (2001) | 2,108 | 100 | 100 | 78 | 22 |
| வாகனங்கள் (2003) | 11 | 200 | 200 | 194 | 6 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | **3,148** | **1,600** | **1,600** | **1,059** | **541** |
| தளபாடமும் அலுவலக உபகரணமும் (2102) | 991 | 800 | 800 | 583 | 217 |
| இயந்திரம் (2103) | 2,157 | 800 | 800 | 476 | 324 |
| **மனித வள விருத்தி** | **2,077** | **2,500** | **4,000** | **3,800** | **200** |
| பதவியினர் பயிற்சி (2401) | 2,077 | 2,500 | 4,000 | 3,800 | 200 |
| **ஏனைய மூலதனச் செலவினம்** | **5,828** | **6,000** | **8,000** | **7,675** | **325** |
| முதலீடுகள் (2202)<br>01. ஏற்றுமதி சந்தைகளினைக் கண்டறிதல் | 5,828 | 6,000 | 8,000 | 7,675 | 325 |
| **மொத்தம்** | **13,172** | **10,400** | **13,900** | **12,806** | **1,094** |